Registered at G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET, COLOMBO—12.

புத்தகம் 11 ஏவிளம்பி ஹு ஆவணி மாதம் 23 திகதி 8-9-57 ஞாயிற்றுக்கிழமை ஸபர் பிறை 13 இதழ் 15




மெய்மெஞ்பேர்க் ஆட்டுப்பால் மா

இருமல், காசம் தொய்வு நோய் மூல வியாதி மற்றும் பலவீனம் முதலானவற்றிற்கு மிகச் சிறந்தது.

விபரங்களுக்கு:

த. கணேசன்,
53, மெயின் வீதி
கொழும்பு.

# பிரதமர் கல்வி அமைச்சரை அழைத்து அந்தரங்கத்தில் கண்டித்தார்?

## சமரஸ உடன்படிக்கைக்கு தஹநாயகா கொடுத்த வியாக்கியானத்தின் விளைவு

## பண்டாரநாயகா அவசரமாக திரும்பியதற்கு மாமனாரின் சுகவீனமல்ல நாட்டின் நிலைமையே முக்கிய காரணம்

(சுதந்திரன் நிருபர்)

மலேயாவிலிருந்து திரும்பிய பிரதமர் திரு. பண்டாரநாயகா முதல் காரியமாகப் பார்த்த வேலை கல்வி அமைச்சர் திரு. தஹநாயகாவை அழைத்துப் பலமாகக் கண்டித்தது என்று நம்பத்தகுந்த செய்தியொன்று சுதந்திரனுக்குக் கிடைத்துள்ளது.

தாம் இலங்கையில் இல்லாத சமயத்தில் பண்டாரநாயகா - செல்வநாயகம் உடன்படிக்கை பற்றி திரு. தஹநாயகா அனுவசியமான 'பிடுங்குப்பாடுகளை' நடத்தியிருக்கக் கூடாது என்று பிரதமர் எச்சரித்ததாகச் சொல்லப்படுகிறது.

பிரதமர் திரு. பண்டாரநாயகா தமது சுற்றுப் பிரயாணத்திட்டங்களை யெல்லாம் ரத்துச் செய்து கொண்டு, மலேயாவிலிருந்து அவசர அவசரமாக இலங்கை திரும்பியதற்கு அவருடைய மாமனாரின் சுகவீனமே காரணம் என்று வெளியில் சொல்லப்பட்ட போதிலும், மந்திரி சபையைச் சேர்ந்த சில மந்திரிகள் பகிரங்கமாக அரசாங்கத்தையும், பிரதம மந்திரியையும், நிதி மந்திரியையும் கண்டிக்கத் தலைப்பட்டதும், கல்வி அமைச்சர், பண்டாரநாயகா — செல்வநாயகம் உடன் படிக்கைக்கு கொடுத்த விபரீதமான வியாக்கியானத்தினால் ஏற்பட்ட விளைவுகளுமே உண்மையான காரணங்களாகும் என்று நம்பப்படுகிறது. மேலும் தாம் மலேயாவில் தாமதித்தால் உள்ளூரில் பல சிக்கல்கள் உருவாகி விடும் என்ற அச்சத்தினாலேயே திரு. பண்டாரநாயகா பதைக்கப் பதைக்க இலங்கைக்கு ஓடி வந்திருக்கிறார்.

இலங்கைக்கு வந்ததும் அவர் முதல்காரியமாககல்வி அமைச்சரை அழைத்து எச்சரித்தார் என்று தெரிகிறது. பிரதமர் இலங்கையில் இல்லாத சமயம் திரு தஹநாயகா பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு அறிக்கையில் பிரதமர் திரு பண்டாரநாயகா தமிழரசுக் கட்சியுடன் செய்து கொண்ட உடன் படிக்கையின் மூலம் சிங்களம் மட்டும் சட்டத்தைக் தமிழரசுக் கட்சியினர் ஏற்றுக் கொண்டதாகவும் அதனால் பிரதமர் தமிழரசுக் கட்சியின் மீது வெற்றியீட்டி விட்டதாகவும் கூறியிருந்தார். இக் கூற்றை திரு. செல்வநாயகம் ஆட்சேபித்து "தஹநாயகாவின் கூற்று சரியானால் உடன் படிக்கை நம்மைக் கட்டுப்படுத்த மாட்டாது" என்று எச்சரிக்கை செய்திருந்தார்.

உடன்படிக்கையைப்பற்றி திரு. தஹநாயகா "பிடுங்குப் பாடுகளை" ஏற்படுத்தியது தகாது என்று பிரதமர் அபிப்பிராயப் பட்டாராம்.

# ஜனுப் முஸ்தபா அமெரிக்கா போகாததன் அந்தரங்கம்

## "ஓசி"ப் பயணம் கிட்டவில்லை எனவே வெட்டெனை மறந்தார்

(சுதந்திரன் நிருபர்)

அமெரிக்காவிலுள்ள மகினுக்கில் என்ற இடத்தில் இவ்வாண்டு நடைபெறும் தார்மீகப் புனருத்தாரண இயக்கத்தின் (Moral Re armament) மகாநாட்டில் பொத்துவில் பிரதிநிதி ஜனுப் எம். எம். முஸ்தபாவும் கலந்துகொள்ளப் போகிறார் என்று பத்திரிகைகளில் செய்திகள் அடிபட்டன அல்லவா?

இதைத் தொடர்ந்து, "சொந்த அலுவல்கள் காரணமாக நான் அமெரிக்காவுக்குப் போக முடியவில்லை" என்று ஜனுப் முஸ்தபா பெருமையடித்துக் கொண்டு ஒரு அறிக்கையை வெளியிட்டார். உண்மையில் நடைபெற்றது என்னவென்பதை விசாரித்தறிந்த சுதந்திரன் அந்தரங்க நிருபர் ஜனுப் முஸ்தபாவின் கூற்று பழம் புளிக்கும் என்று நிராசையடைந்த நரியின் கூற்றுக்கு ஒப்பானது என்பதை விளக்கினார்!

அமெரிக்காவில் நடைபெறும் தார்மீகப் புனருத்தாரண இயக்கத்தின் மகாநாட்டில் கலந்து கொள்ள இலங்கையிலிருந்து 14 பிரதிநிதிகளை அனுப்பிவைக்குமாறும் அவர்களுக்கு வேண்டிய பிரயாணச் செலவுகளைத் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் தா. பு. இயக்கத்தின் நிர்வாக சபை இலங்கைக்கு அறிவித்தது. இதன் பிரகாரம் 14 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்களில் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி.

(9-ம் பக்கம் பார்க்க)

K. Venkatesan

T' Phone: 5847.

மிகக் குறைந்த விலையிலிருந்து ஆகக் கூடுதலான விலைகளுக்கும்எங்களிடம்

சகல விதமான கைத்தறி புடவைகள், மில் ரகங்கள், பெங்களூர் பெனாரஸ், சேலம், மதுரை பட்டு சேலை ரகங்களும் கோயமுத்தூர், உறையூர் 40 முதல் 100 வரை கைத்தறி சேலைகளும், சோளிகளும் மிகக் குறைந்த விலைகளில் விற்பனவு செய்து வருகிறோம்



வியாபாரிகளுக்கும், மொத்தமாக எடுப்பவர்களுக்கும் விசேஷமாக விலை குறைக்கப்பட்டிருக்கிறது.

கே. வெங்கடேசன்,

இறக்குமதியாளர்,

71, 73, செட்டியார் தெரு, கொழும்பு.

Branch:—
148, Lower Street, BADULLA.

# வேதனையை விலை கொடுத்து வாங்கக் கூடாது

## ஆசிரியர்களின் திறமையைக் காணத் 'தகுதி காண் பரீட்சை' நடைபெறுமா?

## கல்வி அமைச்சரின் நியமனமுறை பல சிக்கல்களுக்கு இடமளிக்கும்

(சுதந்திரன் நிருபர்)

"எதிர்காலம் வாலிபர்களுடையது என்ற கொள்கை எனக்கு உடன்பாடானதே. இளம் ஆசிரியர்களுக்கு உற்சாகமும் உயர்ச்சியும் அளிக்கப்பட வேண்டும் என்பதற்கு நான் மாறுபட்டவனல்ல. ஆனால் அப்படி அளிக்கப்படும் உற்சாகமும், பதவி உயர்ச்சியும் அவர்களுக்கும், நாட்டுக்கும், ஒருங்கே நன்மை பயக்க வேண்டும். சாதகமான பலாபலன்களைத் தராத புதிய முறைகளைப் புகுத்துவது வேதனையை விலை கொடுத்து வாங்குவதாக முடிந்து விடக்கூடாது"

திறமையுள்ள வாலிபர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி வழங்குவதான, கல்வி அமைச்சர் திரு. தஹநாயகாவின் புதிய நியமன முறை பற்றித் தமது அபிப்பிராயத்தைக் கூறுகையில் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும், கொழும்பு விவேகானந்த

(9-ம பக்கம் பார்க்க)

மார்க்கோனிபோன்



"கம்பானியன்" வானொலிப் பெட்டி

கவர்ச்சிகரமானது — — சிக்கனமானது

உங்களிடம் இருப்பதைப் பற்றி மகிழ்ச்சியடைய வேண்டியது!

ஏ ஸி/டி ஸி மெயின்ஸ்ஸெட் ரூ. 215/-

எல்லாவித டிரை பட்டரி செட் ரூ. 190/-

ஏஜண்டுகள்:

ஜோர்ஜ் பிரவுண் அன் கோ லிமிட்டெட்.,
இன்வெரஸ்க் ஹவுஸ்,
மக்கலம் ரோட்,
கொழும்பு.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்:

# நாட்டைக் காக்கும் பணியில் தமிழ் நங்கை

## வேல் கைக் கொடுத்து 'செரு முகம் நோக்கி செல்' என தன் ஒரே பாலகனை பணித்தாள்

### புறநானூறு தரும் வீர வரலாறு

அழகான பெரிய மாளிகை அது. அன்பு மணம் வீச இன்ப வாழ்க்கை நடாத்திய ஒரு குடும்பத்திற்குச் சொந்தம். அங்குள்ள ஒரு சிறிய அறையினுள்ளே அந்த இருவரும் படுத்திருந்தார்கள். பட்டு மெத்தையின் மேலே, இலவம் பஞ்சத் தலையணைகளுடன் சொகுசாகத் தூங்கிக் கொண்டிருந்தான் அவன். வெளியுலகைப்பற்றி அவ்வளவு அக்கறை தோன்றாத சிறு வயது அவனுக்கு. அவனுக்கருகிலே வெறுந்தரையிலே, கையே தலையணையாக, கண்ணீரே துணையாகக் கிடந்தாள் அவனுடைய அருமைத் தாய். அவள் சிந்தனை எங்கெங்கோ சஞ்சாரம் செய்துகொண்டிருந்தது. திடீரென விழித்துக் கொண்டான் மகன்.

"அம்மா......அம்மா......"

"ம்"

"அப்பா எங்கே? இன்று முழுவதுமே காணவில்லையே?" அவன் குரலில் காணப்பட்ட ஏக்கம் அவளை என்னவோ செய்தது.

"படுத்துத் தூங்கு கண்ணே, சீக்கிரம் அப்பா வந்துவிடுவார்" தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டாது அவனுக்குப் பதில் கூறினாள்.

அவன் அத்துடன் விடவில்லை. பேலும் கேட்டான். "டபோ தாத்தா எங்கேம்மா?"

"வீணாக மனதை அலட்டிக்காதே ராஜா, என் கண்ணல்ல, தூங்கு கண்ணே" பரிவுடன் அவன் உடலை வருடினாள் அவள். மறுபடியும் தூங்கிவிட்டான் அவன்.

ஏதோ சொல்லி அவனைத் தூங்கப் பண்ணிவிட்டாள். ஆனால் அவளுக்குத் தூக்கம் வந்தால்தானே! பழைய கால நினைவுகள் அவள் மனத்தை அலைக்கழித்தன. இன்பமும் துன்பமும் கலந்த அவள் வாழ்க்கையே ஒரு பெரிய வரலாறு.

ஆம்! அவள் இப்போது ஒரு விதவை. ஆனால் அது அவளது மகனுக்கு தெரியாது. இல்லாத பல நல்ல கதைகளைச் சொல்லிச் சோற்றையூட்டும் பருவத்தைக் கடந்தவன்தான் அவன். ஆனாலும் தாய் சொன்னவற்றை நம்பினான். அந்த நம்பிக்கையுடன்தான் தூங்கினான்.

அவளும் உண்மையைச் சொல்லப் பலமுறை விரும்பினாள். ஆனால் மனசு வரவில்லை. எங்கே அவனது பிஞ்சு உள்ளம் புண்பட்டு விடுமோ என்று பயந்தாள்.

அவள் மறக்க முயன்று கொண்டிருந்த சம்பவங்களை அவனுடைய கேள்விகள் மறுபடியும் நினைவூட்டின. கண்கள் 'பொல பொல' என்று நீரைச் சிந்தின. அவள் அழுதாள்; ஆருமற்ற அனாதை போல் அழுதுகொண்டே இருந்தாள். கணவனின் பிரிவு அவளை வருத்தி, வாட்டிக் கசக்கிப் பிழிந்தது. அவன் சென்ற இடமோ...!

★

வேற்றரசன் படைகள் நாட்டை முற்றுகையிட்டன. வீரர்கள் எல்லோரும் நாட்டைக்காக்க, எதிரிகளை

சிற்பி

ஓட்ட, வீட்டிலிருந்து வெளிப்புறப்பட்டனர். நாட்டுப் பற்றுக்கு முன்னே அன்பு மனைவியரும், அருமைக் குழந்தைகளும் அவர்கட்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. வீரக் கழல் ஒலிக்க, வீறுகொண்டெழுந்தனர் வீரர்கள். அப்படிப் போருக்குச் சென்றவர்களுள் அவள் தந்தையும் ஒருவர்.

சண்டை தொடங்கியது. இரு திறத்தாரும் நன்றாகப் பொருதினர். கண் இமைக்கும் நேரத்தில் போர்க்களம் பிணக்காடாக மாறியது இரத்த ஆறு பெருக்கெடுத்தோடியது. அந்தச் செங்குருதியிலே மிதந்து சொர்க்கததை நோக்கிச் சென்று கொண்டிருந்தது அவள் தந்தையின் உடல்.

பெண்களெல்லோரும் பேதையர்களாக, பேடிகளாக வாழ்ந்த காலமல்ல அது. தந்தையின் மரணச் செய்தி அவளை அணுகியது. மகிழ்ந்தாள் அவள். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு மடிந்தாரே என்று மகிழ்ந்தாள்.

மறுபடி படை திரட்டப்பட்டது. அதில் அவள் அன்புக் கணவன் சேர்ந்தான். மன மகிழ்ச்சியுடன் விடை கொடுத்தாள் அவள். வெற்றி வீரனாகத் திரும்பி வரவேண்டுமென்று வாழ்த்தி வழியனுப்பினாள்.

ஆனால் அவள் ஆசை நிறைவேறவில்லை. அவளுடைய கணவனும் மாண்டுவிட்டான்; இல்லை, வீரமரணம் எய்திவிட்டான்.

★

சென்றகால நிகழ்ச்சித் தொடர் இத்துடன் நின்றுவிட்டது. அருமைத் தந்தையும் ஆருயிர்க் காதலனும் இறந்துவிட்டார்களே என்ற கவலை ஒரு புறம்; நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டு வீர மரணம் எய்தினர் என்ற மகிழ்ச்சி மறு புறம். கவலை நெஞ்சை உருக்கியது. மகிழ்ச்சி கவலையை மறைத்தது. துன்பமும் இன்பமும், மாறிமாறித் தொடர்ந்தன. கண்களிலிருந்து பெருகும் நீரைத் தடுக்க முடியாது தவித்தாள்.

திடீரென உணர்ந்தாள் தன் ஒரே குலக் கொழுந்து பக்கத்தில் படுத்திருப்பதை. அவன தூக்கம் கலையவில்லை என்பதில் திருப்தி அடைந்தாள். தானும் தூங்குவதற்கு முயன்றாள். ஆனால் நித்திராதேவி அவளுக்குச் சொல்லாமலே எங்கோ சென்று விட்டாள். இரவு நேரம் அவளைக் கொல்லாமலே கொன்றது. அங்குமிங்கும் புரண்டு கொண்டிருந்தாள். நாழியும் கழிந்து கொண்டிருந்தது.

(7-ம் பக்கம் பார்க்க)


SMITHS

K·L·G

With NEW CORUNDITE insulation




ஸ்மித் கே. எல். ஜி. பிளக்

உலகத்தில் துரிதமானதும் பிரசித்தி பெற்றதுமான

கே. எல். ஜி.

பிளக்கை

உங்கள் தினசரி தேவைக்குப் பாவியுங்கள்.

கே. எல். ஜி. விநியோகஸ்தர்கள்:

மெஸர்ஸ் பிரவுன் அன் கோ, லிமிட்டெட், டார்லி ரோட், கொழும்பு.
,, மெஜஸ்டிக் எலக்ட்ரிக் கம்பெனி, காலி ரோட், பம்பலப்பிட்டி.
,, பால் அன் கோ., 2-வது டிவிஷன், மருதானை.
,, வாலிஸ், கொலேஜ் வீதி, கொட்டாஞ்சேனை & காலி ரோட், கொள்ளுப்பிட்டி.
,, முபாரக் ஸ்டோர்ஸ், 2ம் குறுக்குத் தெரு, கொழும்பு.
,, ஏ. யோன் பெரேரா அன் சன்ஸ், லேயார்ட்ஸ்பிராட்வே, கொழும்பு-12;
,, அரோஸ் லிமிட்டெட், நொறிஸ் ரோட், கொழும்பு.

ஸோல் ஏஜண்டுகள்:

கொழும்பு ஏஜன்ஸீஸ் லிமிட்டெட்,

355, டீன்ஸ் ரோட், கொழும்பு—10.

போன்: 94211. த. பெ. இல: 913. தந்தி: [illegible]



நோத் சிலோன் டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்,

மோட்டார் வாகனங்கள் வேண்டுமா?
இரும்புக் கட்டிடச் சாமான் வேண்டுமா?
மின்சார மோட்டார் உபஉறுப்புக்கள் வேண்டுமா?

வேறென்ன வேண்டும்?

North Ceylon Trading Co. Ltd.
11/3, Stanly Road, JAFFNA;

போன் :578. தந்தி:"யாழ்றேட்ஸ்"



786

பீடி அன்பர்களுக்கோர்

நல் அறிவிப்பு

"S. R. பீடி"

தேச பிரசித்திபெற்ற செய்யது பீடி கம்பெனியாரால் தயார் செய்யப்படுகிறது.

பாவிப்பாளர் போற்றத்தக்க சிறந்த உயர்தர அக்கூன் புகையிலையால் உருவாக்கப்பெற்று அன்பர்கள் நல் ஆசி பெற வந்திருக்கிறது.

கால தேச வர்த்தமானத்தை முன்னிட்டு குறைந்த விலையில் சிறந்த முறையில் உதயமாகி இருக்கிறது.

உண்மை விளங்க ஒருமுறை உபயோகித்துப் பார்க்க கேட்டுக்கொள்கிறோம்.

STOCKIST

S. Abdul Cader

254, Messenger Street, COLOMBO.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க. சுப்பிரமணியம், காரைநகர்

கே: குயுக்தியாரே, தங்களுக்கு வாழ்வில் இனித்தது எது? புளித்தது எது?

ப: இனித்தது தமிழ். புளித்தது அரசாங்க உத்தியோகம்.

கே: இன்று உங்கள் மனைவியாய் இருக்கும் பெண் உங்களை முதல் கேட்டது யாது? நீங்கள் கொடுத்தது யாது?

ப: ரயிலில் சந்தித்த அவர் முதலில் கேட்டது குடிப்பதற்கு ஒரு கிளாஸ் தண்ணீர். நான் கொடுத்தது ஒரு போத்தல் ஒரேஞ் பார்லி. பச்சைத் தண்ணீர் கேட்டால் இனிப்புப் பானம் தரும் இந்த ஏமாளி ஜாக்கட் துணி கேட்டால் பட்டுப் புடைவையும் சேர்த்து வாங்கித்தரக்கூடியவர் என்பதை அவர் அப்போதே அறிந்து கொண்டார் என்று பின்னல் தெரியவருகிறது.

ஃ

அ. அ. மஹ்மூது, மாத்தளை

கே: எழுத்தாளர்களில் பெரும்பாலோர் மெலிந்து இருப்பது எதனுல் குயுக்தியாரே?

ப: எழுத்தை நம்பி வாழ்பவர்கள் இந்த நாட்டில் தங்கள் வயிற்றுக்குக் காற்றை நம்பி வாழவேண்டியிருப்பதால்.

கே: பணக்காரப் பெண்களைவிட ஏழைகள் அதிக குழந்தைகளுக்குத் தாயாவது ஏன்?

ப: பணக்கார வீட்டுக் கணவர்கள் வெளியில் ஹோட்டல்களில் சாப்பிட்டுப் பசியாறிக்கொள்வதுமுண்டு. ஆனல் ஏழைக் கணவர்கள் நித்த நித்தம் வீட்டில்தான் சாப்பிடுகிருர்கள். என்ன செய்வது!

ஃ

அ. புத்தி சிகாமணி, ஏருவூர்

கே: நீங்கள் உங்களையே மறந்திருக்கும் நேரம் எது?

ப: ஸ்ரீமதி குயுக்தியார் சிலசமயம் எங்கள் ஆரம்ப கால சந்திப்புகள்பற்றிய நினைவு றெக்கோட்டுகளைத் திருப்பிப்போடும் நேரம்.

ஃ

சி. பொன்னுத்தம்பி, புன்னைக்குடா

கே: இந்தநாட்டில் பொதுவுடைமைவாதிகள்எனப்படுவோர் யார்?

ப: தங்கள் பொருட்களைச் சுய உடைமையாகக் கட்டிக் காத்துக்கொண்டு, பிறர் பொருட்களைப் பொதுவுடைமையாக்கிஅனுபவிக்க விரும்பும் சில சுகுண சீலர்கள் தான் இந்த நாட்டின் பொதுவுடைமை வாதிகளாவர்.

ஃ

நா. ஆதம்வாவா, மஞ்சந்தொடுவாய்

கே: கற்புக்கரசியென்ருல் யார்?

ப: தனது கற்பைப் பாதுகாப்பவர்கள் எல்லோரும் கற்புக்கரசிகள் என்றவியாக்கியானத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியானுல் கலியாணமேசெய்துகொள்ளாமல் காலங்கழித்து வரும் பாடசாலை ஆசிரியைகள் பலர் கற்புக்கரசிகள் ஆகிவிடுவார்கள். தன்னையும் காத்து கைப்பிடித்த கணவனையும் முறையாகப் பேணுபவள் எவளோ அவள்தான கற்புக்கரசியாக முடியும்.

ஃ

வி. த. குமாரசாமி, மட்டக்களப்பு

கே: இப்போதைய பெண்கள் தங்கள் அங்கங்களை வெளியில் காட்டக்கூடிய மெல்லிய ஆடைகளை அணிவதேன்?

ப: இருபதாம் நூற்ருண்டில் இரகசியம் என்பதற்கே இடமில்லை என்பதை அவர்கள் அறிந்திருக்கிருர்கள். அணுகுண்டு இரகசியம்கூட ருஷியாவுக்கு வெளியாகிவிட்ட பின்பு, மூடிமறைப்பதற்கு இக்காலப் பெண்களிடம் அப்படி என்னதானிருக்கிறது?

கே: பஞ்சுக்குப்பக்கத்தில் தீயை வைத்தால் புகை கிளம்பும். யுவனுக்குப்பக்கத்தில் யுவதியை வைத்தால்.........

ப: அவதி கிளம்பும்!

ஃ

சா. ஜெயபாலன், மீசாலை

கே: குயுக்தியாரே, இந்த வானத்தை எது தாங்கி நிற்கிறது?

ப: எதுவும் தாங்கி நிற்கவில்லை. ''பாரதியாரின், உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே'' என்ற பாட்டைக்கேட்டுப் பயந்துபோய் இடிந்து விழாமல் வானம் அப்படியேநின்கின்றது.

ஃ

த. இராசேந்திரன், மட்டக்களப்பு

கே: பொத்துவில் எம். பி. முஸ்தபா ப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிருர்?

ப: திட்டமிட்டபடி அமெரிக்காவுக்குப்போக முடியாமல் போனதால் ஹொலிவூட் நட்சத்திரங்களைக் கனவில் கண்டுகொண்டிருக்கிருர்.

ஃ

ஈஸ்வரன்—வேதா, கொழும்பு

கே: எங்கள் கூட்டுறவு ஸ்தாபனத்துக்கு என்ன பெயர் வைக்கலாம்?

ப: வேதாளேஸ்வரன் கூட்டுறவு ஸ்தாபனம் என்று பெயர் வைக்கலாம்.

கே: குயுக்தியாரே, உமது மூளை ருத்தல் என்ன விலை?

ப: அது குண்டுமணிக் கணக்கில் விற்கும் பொருளப்பா. ருத்தல் கணக்கில் விலை சொன்னுல் நீர் வாங்க மாட்டீர்!

கே: உமக்கு ஒரு டஜன் பிள்ளைகள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன், உண்மையா?

ப: உண்மை. உள்ள இரண்டும் உபத்திரவத்தில் பன்னிரண்டுக்குச் சமம்!

ஃ

எஸ். எல். சவுந்தரநாயகம், இலுப்பைக்குளம்

கே: உலகில் துர்ப்பாக்கியசாலிகள் யார்?

ப: நம்பிக்கையோடு சுவிப் டிக்கட் வாங்கிவிட்டு மறுநாள் பத்திரிகையைப் புரட்டிப் பார்க்கும்போது இலக்கம் சரி எழுத்துப் பிழை என்ற நிலைமையில் உள்ளவர்கள் தான்.

ஃ

எம். ஏ. சத்தியநாதன், புவாக்பிட்டி

கே: முட்டாள்தனமான காரியம் எது?

ப: எந்தக் காரியத்தையும் சொந்த மூளையைக்கொண்டு சிந்தித்துச் செய்யாமல் முட்டிக்கொண்டு குனிவது முட்டாள்தனமான காரியம் எம்மனுர் புலவர்.

ஃ

எஸ். ஆர். வடிவேல், களுதாவளை

கே: 'கேட்டுப்பாருங்கள்' என்ற தலைப்பிலுள்ள படத்தை ஒவ்வொருநாளும் கனவில் கண்டு கலங்குகிறேன். இந்நிலை மாற ஒரு உபாயம் கூறுவீர்களா?

ப: ஒரு உபாயம் என்ன ஓராயிரம் கூறுவேன். 'காதல் கொண்டது கனவில் கண்டது' என்பது புதுமொழி. குயுக்தியார்மீது உமது காதலை விட்டொழியும். அவர் ஒரு மீசை முளைத்த ஆண்பிள்ளை!

ஃ

எஸ். ஆரோக்கியம், டிக்கோயா

கே: ஓர் இளம்பெண் பலரைக் காதலிக்கிருள். பின்பு அவர்களில் சிலரைக் கைவிடுகிருள்; இது சரியா?

ப: அவள் முடிவில் ஒருவரைப் பிடித்துக்கொள்கிருள் அல்லவா? பல மீனுக்குத் தூண்டில்போட்டு ஒரு மீனைப் பிடிப்பது ஒன்றும் புதிதல்லவே.

ஃ

செல்வி வனிதா சரவணமுத்து, குருமண்வெளி

கே: தாங்கள் சிந்திக்கத் தொடங்கியது எப்போ?

ப: எப்போது சிந்தனையை ஊற்றுப் பேனுவினூடாக எழுத்துக்களாகப் படைத்து அதனுல் என் மனத்தையும் வயிற்றையும் நிரப்பிக் கொள்ளலாம் என்று கண்டேனே, அப்போது முதல் சிந்திக்கத் தொடங்கினேன்.

> மிஸ்டர் குயுக்தியார்
> C/O சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு—12.

ஃ

செல்வி லலிதா சரவணமுத்து, குருமண்வெளி

கே: நமது கல்வி மந்திரி யாரை எதற்கு ஒப்பிடலாம்?

ப: அவர் வாயைக் கரவாகு உமலுக்கும், தலையை வடமராட்சி ஊமலுக்கும் ஒப்பிடலாம்!

ஃ

யு. ஏ. கபூர், நேரியகுளம்

கே: கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் எங்கே போயிருக்கிருர்?

ப: தமது சொந்த அனுபவத்தைக் கொண்டு, மது ஒழிப்பின் அவசியத்தைப் பிரசாரம் செய்வதற்காக அவர் நரகலோகம் போயிருக்கலாம்.

ஃ

யூ. எம் ஹனிபா, பால்முனை

கே: நாம் இருவரும் வாள் எடுத்துக்கொண்டு சண்டை போட்டால் யார் அதில் ஜெயிக்கக்கூடும்?

ப: யாராவது ஒருவர் ஜெயிக்கலாம். ஆயினும் அந்த ஜெயம் நிலையானதல்ல. 'இன்று வாள் வென்றதனை இன்னொருவாள் வெல்லுவதே, என்றும் இம் மண் ஆள் இயல்பு' என்கிருர் மகரிஷி சுத்தானந்தர்

கே: அனுமாருக்கும் உமக்கும் வித்தியாசம் இல்லை என்கிறேன். உமது கருத்தென்ன?

ப: [illegible] கிடையாது; வால் பிடிக்கும் வழக்கமும் இடையாது.

ஃ

சகுந்தலா தர்மலிங்கம், கண்டி

கே: 'கூத்தாடுவதும் குண்டி நெளிப்பதும் ஆத்தாதவன் செய்யும்தொழில்' என்று ஒரு பழமொழி இருக்கிறதே. இது நாடகமும் நாட்டியமும் ஆடுபவர்களை இழிவு செய்யும் கருத்தில் தோன்றியதா?

ப: இல்லை. இந்தப் பழமொழியில் ''கூத்து'' என்ருல் இன்னொருவருடைய கைப்பொம்மையாக ஆடும் இழி பண்பையும், ''குண்டி நெளிப்பது'' என்ருல் போக விட்டுப் புறஞ்சொல்லும் இழிகுணத்தையும் குறிப்பனவாகும். இவ்விரண்டும் ஆத்தாதவனுன கோழையின் செயல். இயல், இசை, நாடகம் என்று முத்தமிழ் வளர்த்த தமிழ் மக்கள் கூத்தை இகழ்வார்களா?

ஃ

இராஜேஸ்வரி, ஹெந்தலை

கே: என் ஆசைக் காதலன் என்னிடம் ஓர் அன்பு முத்தம் கேட்கிருர். கொடுக்கவா, வேண்டாமா?

ப: ''கொடுப்பவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திரும்பப் பெறுவார்கள்'' என்பது காதல் பைபிளில் ஒரு வேத வாக்கியம், அம்மா.

ஃ

என் அருளானந்த ராஜா, புத்தளம்

கே: ஒய், குயுக்தியாரே! உமது முகம் இவ்வளவு செக்கச் செவேலென்று அழகாய் இருப்பதற்கு நீர் என்ன பவுடரை உபயோகிக்கின்றீர்?

ப: தூத்துக்குடி மிளகாய்ப் பவுடரை!

ஃ

ரகுதேவி, வத்தளை

கே: நான் ஒருவரைக் காதலிக்கின்றேன். அவரும் என்னைக் காதலிக்கிருரா என்பதை எப்படி அறியலாம்?

ப: அவரைக் காணும் போது இலேசாக இரண்டு பற்களைக் காட்டுங்கள். அவர் முப்பத்திரண்டு பல்லையும் காட்டினுரானுல், அப்புறம் அவர் கண்ணைப்பாருங்கள். அது குத்திட்டு நிற்கும்: நின்ருல் நிச்சயம் அவர் உங்களைக் காதலிக்கிருர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.


# உஷா

## தையல் மெஷின்கள்

**குடும்பஸ்தர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்!**

உஷா மெஷின் ஒன்று உங்களிடம் இருந்தால் நீங்கள் தையல்கூலிக்காக செலவிடும் அவ்வளவு பணத்தையும் மிச்சப்படுத்தலாம்.

**கீழ்க்காணும் விபரங்களைப் பாருங்கள்!**




**கவர்ச்சிகரமான புதுவித மெஷின்கள் கையிருப்பில் உள்ளன.**

- ★ லாகவமாக இயங்கி முன்னும் பின்னும் தைக்கக்கூடியவை. எல்லா சீதோஷ்ண நிலைக்கும் தகுந்தவாறு அமைக்கப்பட்டுள்ளன.
- ★ மாற்றிக்கொள்ளக்கூடியதும் எளிதில் கிடைக்கக்கூடியதுமான உறுப்புகள் (ஸ்பெயர் பார்ட்ஸ்) உண்டு.
- ★ உறுதியான தயாரிப்பு—ரம்மியமான தோற்றம்—திறமையான உழைப்பு.
- ★ எங்கள் விலைகள் மிகவும் சகாயமானவை;

ரொக்க விலை

| | | |
|---|---|---|
| கை மாடல் | ரூ. | 195/- |
| டிறேடில் மாடல் | ரூ. | 315/- |
| போல்டிங் மாடல் | ரூ. | 335/- |

**மாதாந்தர தவணையில்**

| | முதலில் முற்பணம் | மாதத் தவணை | | |
|---|---|---|---|---|
| கை மாடல் | ரூ. 50/- | ரூ. 15/- | விகிதம் | 18 மாதங்கள் |
| டிறேடில் மாடல் | ரூ. 75/- | ரூ. 19/50 | ,, | 18 ,, |
| போல்டிங் மாடல் | ரூ 75/- | ரூ. 21/50 | ,, | 18 ,, |

சோல் ஏஜண்டுகள்

**ரெய்மு சன்ஸ் லிமிடெட்**

17, புதிய சோனகத் தெரு, கொழும்பு

டெலிபோன்: 6060


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத நாட்டுச் சுற்றுப் பிரயாணம்: 12

சென்ற வாரத் தொடர்ச்சி

# ஒரு விளக்கேற்றினால்
## ஓராயிரம் விளக்கொளி கிடைக்கும்

## ஆக்ராவில் ஷாஜஹான் மாளிகையில்
# இந்த அற்புதம் நிகழ்கிறது

## அலகபாத்தின் பொலிவும் பெருமையும்

(நாவற்குழியூர் நடராசன்)

வாரணாசிக்கும் அலகபாத்துக்கும் அதிக தூரமில்லையாதலால் ஒரு பாதிப் பகலிலேயே அங்கு சென்று சேர்ந்து விட்டோம். அலகபாத்திலே பார்ப்பதற்கு அதிகமாக எதுவுமில்லையென்றாலும், அங்குள்ள திரிவேணியும் சுவராஜ் பவனும் எம்மை அங்கு இழுத்தன.

ஆறுகள் ஒன்றோடு ஒன்று கலக்குமிடங்களுக்கும் அவை கடலுடன் கலக்கும் சங்கமங்களுக்கும் இந்த மக்கள் சமுதாயத்துக்குள்ளே ஏனோ ஒரு மதிப்பு இருக்கத்தான் செய்கிறது. அதுவும் புண்ணிய தீர்த்தங்களென்று கருதப்படும் கங்கையும் யமுனையும் சரஸ்வதி ஆறும் ஒரே இடத்தில் வந்து கலக்கும் போது, அந்தத் திரிவேணிக்கு எப்படி மதிப்பில்லாமற் போகும்? அரைக் கட்டை காற்கட்டை அகலமான அந்த ஆறுகள் ஒன்றுக் கலக்கின்ற அந்த இடத்திலே ஒரு தனி அழகு தாண்டவமாடுவதைக் கண்களால் அன்றி மனத்தினால்தான் அதிகமாகக் காணமுடிகிறது.

### அலகபாத் பெருமை பெறுகிறது

மூன்று ஆறுகளின் சங்கமத்தினால் அலகபாத் அழகு பெறுவதுபோல, அகில பாரதத்திற்கும் முதல்வராக விளங்கும் ஜவஹர்லால் நேரு அவர்களின் வாசஸ்தலத்தைக் கொண்டிருப்பதாலும் அது பெருமை பெறுகிறது. ஆனந்த பவன், சுவராஜ் பவன் என்ற அழகான இரண்டு மாளிகைகள் அவற்றின் அமைப்பால் மட்டுமின்றி, அங்கு தியாக சீலர்களின் பெருமையினாலும் சிறப்பெய்தி விளங்குகின்றன. பண்டித மோதிலால் நேருவின் இல்லமாக விளங்கிய ஆனந்த பவன் இப்பொழுது பொது மக்கள் சொத்தாக—அரசாங்க அலுவலகமாக—விளங்குகிறது. அதன் அயலே உள்ள சுவராஜ் பவனிலேதான் அன்று ஜஹர்லால் நேரு தன் சுயராச்சியக் கனவுகளையெல்லாம் கண்டுகொண்டிருந்தார். அங்கு அவர் கண்ட கனவுகள்தான் இன்று பாரதத்தில் நனவாகியிருக்கின்றன.

அலகபாத்திலே ஒரு பெரிய சர்வகலாசாலையும் உண்டு. அதனையும் பார்த்துவிட்டு, அங்கிருந்து ஆக்ரா என்ற இடத்துக்குக் கிளம்பினோம்.

### ஆக்ராவில் தாஜ்மஹால்

ஆக்ரா ஒரு சரித்திரப் பிரசித்திவாய்ந்த இடம் என்பதைப் பலர் அறியாமலிருக்கலாம்; ஆனால், தாஜ் மஹாலைப் பற்றிச் சொன்னால் அதன் சரித்திரப் பெருமையை ஆரும் தெரிந்துகொள்வார்கள். மொகலாயச் சக்கரவர்த்திகளின் காலத்திலே ஆக்ரா ஒரு அற்புத நகரமாக விளங்கியிருக்கும் என்பதை அங்குள்ள தாஜ் மஹால் கட்டடமும் ஷாஜஹானின் மாளிகையும் இன்னமும் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

யமுனா நதியின் ஒரு கரையிலே தாஜ் மஹாலும், மற்றக் கரையிலே ஷாஜஹானின் மாளிகையும் கட்டப்பட்டிருக்கின்றன. ஷாஜஹான் அந்தப் பிரதேசத்திலே அரசாட்சி செய்த காலத்தில் அந்த அருமையான இரண்டு கட்டடங்களையும் கட்டி வைத்து விட்டமையால் அவனுடைய புகழ் இன்றுவரை நின்று நிலவுகிறது.

### ஷாஜஹான் மாளிகை

யமுனா நதியின் தீரத்தில் ஒரு கோட்டைக்குள்ளேயே தன் மாளிகையைக் கட்டியிருக்கிறான் ஷாஜஹான். பிரதான வாயிலால் அக்கோட்டையினுள் நுழைந்தால் இடது புறம் முழுவதும் படை மக்களுக்கென்றே ஒதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். வலது புறத்திலேதான் அரச மாளிகை அமைந்திருக்கிறது. அதன் முகப்பிலே சபா மண்டபம் ஒன்றுண்டு. அதன் பின்னால் தான் அரச குடும்பத்தினர் வாழும் அறைகளும் குளிக்கும் இடங்களும் எல்லாமிருக்கின்றன. மற்றொரு பக்கத்தில் அவர்கள் வணங்கும் மசூதி ஒன்றிருக்கிறது. அந்த மாளிகையின் எல்லாப் பாகங்களிலும் நவரத்தினக் கற்களும் பொன் தகடுகளும் பதிக்கப்பட்டு இப்பொழுது நீக்கப்பெற்றிருக்கின்றன.

குளிக்கும் அறையில் வாசனாதிரவிய பாத்திரங்களும் வகை வகையான நீர்த் தொட்டிகளும் இருக்கின்றன. அதனுள்ளே சற்று இருட்டாகவேயிருப்பதால் விளக்கு வைப்பதற்கும் ஓர் இடம் அமைத்திருக்கிறார்கள்; ஆம், ஒரேயொரு இடத்தில் ஒரேயொரு விளக்கு மட்டுந்தான் வைக்கலாம். ஆனால், அதை அங்கு ஏற்றி வைத்ததும், ஓராயிரம் விளக்குகள் ஏற்றி வைத்திருப்பதுபோலத் தெரிவதுமல்லாமல், ஒளியும் பெருகும். அதற்கேற்ற விதமாக வெளிவளைந்த கண்ணாடிகளும் உள்வளைந்த கண்ணாடிகளும் உட் சுவர் நிறைய ஒட்டப்பட்டிருக்கின்றன. அந்த மாளிகையின் ஒரு பகுதியிலே உள்ள அறையின் சுவர்களில் ஒருவகை நிறக் கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருக்கின்றன. ,அவற்றினுள்ளே பார்த்தால் யமுனா நதிக்கு அக்கரையிலே வெகு தூரத்திலுள்ள தாஜ்மஹால் தெரியும். ஷாஜஹான் தன் தள்ளாத வயதில், அந்த அறையிலேயிருந்து தன் காதல் மனைவி—ஏக பத்தினி—மும்தாஜின் சமாதியைப் பார்த்து லயித்துக் கொண்டேயிருப்பானும். அந்த மாளிகையின் ஒரு பிரதான அம்சமென்னவென்றால், அரசனுடைய அறைகளுக்காயினும் சரி, அரசியுடைய அறைகளுக்காயினும் சரி, கதவுகள் அமைக்கப்படவில்லை. நெடுங் கதவுகளுக்குப் பதிலாக நீளத் திரைச் சீலைகளை உபயோகித்தார்கள் அந்த அரச தம்பதிகள் என்று அந்த ஊர் வழிகாட்டி ஒருவர் சொன்னார்.

ஷாஜஹானின் கோட்டை மாளிகையிலிருந்து அவன் அமைத்த தாஜ் மஹாலைப் பார்க்கச் சென்றோம்.

பாரத தேசம் முழுவதற்கும் அழியாப் புகழைத் தேடித் தரும் அந்தப் பிரமாண்டமான சமாதி, தூரத்திலேயே பளிங்கு போலப் பிரகாசித்துக்கொண்டிருந்தது பகலவன் ஒளியில். அதன் வாசலில் உள்ள அழகான நீர் நிலைகளும், அணிவகுத்து நிற்கும் ஒருவகை மரங்களும் அந்த இடத்துக்கே ஒரு தனி மதிப்பை அளிக்கின்றன. (தொடரும்)

வெள்ளவத்தையில்

போன்: 8353.

ஒரு புதிய குரோஸரி ஸ்டோர்ஸ் திறக்கப்பட்டுள்ளது.

உங்களுக்கு அன்றாடம் வேண்டிய பொருட்கள் அத்தனையும் ஆகக் குறைந்த விலையில் விற்கப்படுகின்றது.

★ குரோஸரிப் பொருட்கள் ★ ஒயில்மண்ட் சாமான்கள்
★ காய்கறிகள் ★ பட்டர் ★ முட்டைகள்

மற்றும் குடும்பப் பெண்களுக்கு வேண்டிய தினைமுதல் பனைவரையுள்ள உணவுப் பொருட்களும், ஆடம்பரத்தின் அணிகலப் பொருட்களும் ஒரே கடையில் பெற்றுக் கொள்ளவேண்டுமெனில் இன்றே விஜயம் செய்யுங்கள்........

# டே ஸ்டார்.

வெள்ளவத்தையில் பணிவுமிக்க சேவை செய்யும் புதிய குரோஸரி ஸ்டோர்ஸ் "மக்ஷா லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரின் புதிய நிறுவனம்.

இலவச டெலிவரி | 84, காலி ரோட், வெள்ளவத்தை.

மாஸ்கோவில்:

# தமிழ் மணக்க...
## தமிழோசை முழங்க....

"உலகெலாம் தமிழோசை பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று அமரகவி பாரதி கண்ட கனவை நனவாக்க நமக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

பல ஆயிரம் மைல்களுக்கப்பாலுள்ள மாஸ்கோவில் இன்று தமிழ் மணக்கத் தொடங்கியிருக்கிறது. ருஷிய மக்கள் தமிழைப் படிக்கத் துடிக்கிறார்கள். ஓரளவு படித்தவர்கள் அதன் அருமை பெருமைகளை அறிந்த மாத்திரத்தில் உள்ளத்தாலும் உணர்வாலும் தமிழர்களாகவே மாறி வருகிறார்கள். தமிழ்ப் பெயர்களைத் தமக்கு சூட்டிக்கொள்ளுகிறார்கள். ஐங்குன்றன், கண்ணன், பெருமாள் என்ற தமிழ்ப் பெயர்களைத் தமக்கு வைத்துக்கொண்ட ருஷியர்கள் இன்று மாஸ்கோவில் உலாவுகிறார்கள்.

செந்தமிழ் வளரச்சொந்த நாட்டிலேதான் சந்தர்ப்பக் குறைவும் சதிகாரக் கும்பலின் சாபத்தீட்டும் இருக்கின்றன. ஆனால் மாஸ்கோ நிலைமை வேறு. அங்கு தமிழ்ப் பணி புரிய தக்கார் ஒருவரை அரசாங்கமே தருவித்திருக்கிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்று, கரந்தைப் புலவர் கல்லூரி, மேலைச் சிவபுரி கணேசர் கல்லூரி இரண்டிலும் முதல்வராகத் திகழ்ந்து, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி பின்னர் சென்னை அரசினர் கலைக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியராக இருந்தவரான இராம. மீனாட்சிசுந்தரம் (பி. ஆர். எம்.) தான் ருஷிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் மாஸ்கோ சென்றிருக்கிறார் செந்தமிழ்ப் பணி செய்ய.

அவர் அங்கிருந்து தமிழன்பர்களுக்கு ஓர் செய்தி அனுப்பியிருக்கிறார். அதில் மாஸ்கோவில் தமிழ் வளரத் தமிழ்த் தொண்டு செய்யும்படி தமிழரைக் கேட்டிருக்கிறார். இதோ அந்தச் செய்திக் கடிதத்தின் ஓர் பகுதி:

"அன்புடையீர்,

இங்குப் பலர் ஆர்வத்துடன் தமிழ் பயில்கின்றனர். ஆனால் சுவடியின்றி ஒரே பழஞ்சுவடியை ஒளிப்படம் (Photo) எடுத்துப் படிக்கின்றனர். தமிழ்ச் சங்கம் நிறுவப்பெறுகின்றது. ஓர் தமிழன் இங்கு வந்து செய்யும் முதல் முயற்சி. தமிழ் இங்கு வேரூன்ற வேண்டும்...........

தமிழரும் தமிழன்பரும் நூல்கள் சில, பழையன வேனும் பதிவுத் தபால் அஞ்சலில் அடியிற் காணும் முகவரிக்கு விரைவில் அனுப்பியுதவ வேண்டுகிறேன். விலை கொடுத்து வாங்க சட்டம் இடம் தரவில்லை. அன்பு கூர்ந்து தமிழ்ப் பணிக்கு முந்துக! விரைவில் தமிழ் வானொலி மாஸ்கோவிலிருந்து பரவும்.........


வணக்கம்

இராம. மீனாட்சிசுந்தரம்.

நூல்கள் அனுப்பவேண்டிய விலாசம்:
Pandit P. R. M. Pillai M. A.
Zubousky Boule Vard, 21
Moscow
U. S. S. R.

தமிழ்ப் பணிக்காகக் கடல் கடந்து சென்ற இராம. மீனாட்சிசுந்தரனாரின் குரலுக்கு ஈழத்துத் தமிழன்பர்கள் தக்க முறையில் பதிலளிக்க வேண்டியது கடமை. ஒவ்வொருவரும் குறைந்தது ஒவ்வொரு நூலாவது அனுப்பவேண்டும். அப்பொழுதுதான் மாஸ்கோவில் தமிழ் மணம் நன்கு கமழ்வதோடு தமிழோசையும் முழங்கும். பாரதியின் கனவும் ஓரளவில் நனவாகும். பாரதிக்கு இவ்வாரத்தில் விழா வெடுக்கப்போகும் நாம் அவன் கனவை நனவாக்க இந்தச் சிறுமுயற்சியாவது செய்ய வேண்டாமா?

—ஆசிரியர்



மாஸ்கோவில் அணிமையில் நடந்த உலக வாலிபர் விழா மல்யுத்தப் போட்டியில் பரிசு பெற்ற ஒரேயொரு இலங்கை மல்யுத்த வீரர் திரு. பி. ஆர். எம். பெருமாள். 67 நாடுகளைச் சேர்ந்த மல்யுத்த வீரர்களோடு பொருதி இலங்கை வீரர் பெருமாள் மூன்றாவதாக வெற்றி பெற்று அதற்கான வெண்கலப் பதக்கத்தை தட்டிக் கொண்டார்.

## 'பறக்கும் குதிரை' நூல் வகைகள்

நமது நாடும், நமது இனமும் சுதந்திரமாக வாழ வேண்டுமானால் நாம் நமது தேவைகளுக்கு கூடிய வரை பிற நாடுகளில் தங்கியிருப்பதைக் குறைக்க வேண்டும்; அதற்கு முதற்படியாக நமக்கு வேண்டிய பொருட்களை நாமே உற்பத்தி செய்ய வேண்டும்; வர்த்தகமும் கைத்தொழிலும் வளர்க்க வேண்டும் என்று நம் மக்களிடையே ஒரு புது ஆர்வம் பிறந்திருக்கும் இந்த நேரத்தில், இந்தப் புதிய பாதையில் முன்னோடியாகச் செல்கிறார்கள் கொழும்பு லீலா ஸ்டோர்ஸ் ஸ்தாபனத்தார்.

இதுகாறும் தையற்கலைக்கு வேண்டிய நூல்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் தமிழர் யாரும் ஈடுபடவில்லை. தற்போது நாட்டின் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காகவும், நாட்டின் சுய தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும் இந் நாட்டு மக்களுக்கு வேண்டிய நூல் வகைகளை இலங்கையிலேயே உற்பத்தி செய்கிறார்கள் மேற்படி ஸ்தாபனத்தார்.

களனியில் "பிரீ லங்கா இன்டஸ்ட்ரீஸ்" என்ற பெய

(13ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாஸ்யக் கலைமாமணி மறைந்து விட்டது

## கலை உலகிலே இருள்

## மக்கள் கண்களிலே கண்ணீர்

''மனிதனுக்கும் மிருகத்துக்கும் வித்தியாசமென்ன? மனிதனுக்கு சிரிக்கத் தெரியும். மிருகத்துக்கு சிரிக்கத் தெரியாது. சிரிக்கத் தெரியாத மிருகங்களும் மனிதரிடையே உள்ளன. இந்த மிருகங்களை மனிதராக்குவது சிரிப்புக் கலை.




''சிரிப்பது எளிது—சிரிக்க வைப்பது கடினம். சிரிக்க வைப்பதைவிடக் கஷ்டசாத்தியமானது சிந்திக்க வைப்பது. சிரிக்க வைப்பதன்மூலம் சிந்திக்க வைக்கவும் முடியுமானால் அது ஒரு பெரிய சாதனை.

சிரிப்பு பலவகைப்படும். புன்சிரிப்பு, கோபச் சிரிப்பு, ஏளனச் சிரிப்பு, கிண்டல் சிரிப்பு, கேலிச் சிரிப்பு, அகங்காரச் சிரிப்பு, ஆணவச் சிரிப்பு, அவிட்டுச் சிரிப்பு, சங்கிதச் சிரிப்பு, சல்லாபச் சிரிப்பு, சாகச் சிரிப்பு, யோகச் சிரிப்பு, போகச் சிரிப்பு என்பன அவற்றுள் சில. பிறருக்குத் துன்பம் ஏற்படாதவகையில் அவர்களுக்கும் சிரிப்பூட்டி நாமும் சிரித்து மகிழக்கூடிய இன்பகரமான சிரிப்பே சிரிப்புகளுக்கெல்லாம் ராஜச் சிரிப்பு ஆகும்.

''பிறருடைய குறையைப் பார்த்து சிரிப்பது நிந்தனை. நம்முடைய குறையை நாமே பார்த்து சிரிப்பது சிந்தனை. இந்த சிந்தனையை செயலில் காட்டுபவர்கள் சமூகத்தின் வந்தனைக்கு உரியவர்கள்'' இவ்வாறெல்லாம் சிரிப்புக் கலைக்கு தத்துவாம்சம் கற்பித்த சிந்தனையாளர்—நகைச்சுவை மன்னர் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். 'கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் விட்டுச் சென்ற காலியான இடத்தை இன்னுமொருவர் புகுந்து நிரப்ப முடியாது'' என்று ராஜாஜி கூறியதை யார்தான் மறுக்க முடியும்?

—ஆசிரியர்

நாட்கள் கழியக் கழிய கவலை தானாகவே ஒழியும் என்கிறார்கள். ஆனால் வாரம் ஒன்று கடந்தும் துயரம் சிறிதாவது தீர்ந்தபாடில்லை. அழுத கண்களுக்கு ஆறுதல் இல்லை. அந்த விஷயத்தை மறக்க முடியவில்லை. நினைக்க நெஞ்சு பொறுக்குதில்லை. நாளெல்லாம் அழுது புலம்பினாலும் ஆற்ற முடியாத துயரத்துக்கு நம்மை ஆளாக்கிவிட்டு மீளா உலகுக்குச் சென்றுவிட்டார் கலையுலக மேதை—நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன். தனது வாழ்நாளெல்லாம் நம்மைச் சிரிக்க வைத்துச் சிந்தை குளிரச் செய்த அன்பர் இன்று அழுது புலம்பி உள்ளம் பதறித் துடிக்க வைத்துவிட்டுப் பிரிந்துவிட்டார். முப்பது கோடிக்கு அதிகமான மக்களின் உள்ளத்திலே அவர் பிரிவால் பேரிடி விழுந்துவிட்டது.

### இருள்

திரைவானம் இருண்டுவிட்டதே நாடகமேடை வெறிச்சோடிவிட்டதே—பொதுமேடை பொலிவிழந்து போய்விட்டதே இந்தக் கொடிய காலனின் இரக்கமற்ற ஈனச் செய்கையால் என்ற புலம்பல் எட்டுத் திக்கும் எதிரொலிக்கிறது.

### அண்ணனும் ஆசானும்

நமக்கெல்லாம் அருமை அண்ணனாகவும் ஆசானாகவும் இருந்து வாழ்வளித்தும் வழிகாட்டியும் உதவிய உத்தமர் போய்விட்டாரே—இவரைப்போல ஒருவர் நமக்கு இனி கிடைக்கப் போவதில்லையே, என் செய்வோம் என்று நடிகர் நடிகைகள் மற்றும் கலையுலகப் பிரமுகர்கள் எல்லாம் கதறிக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

### இழப்பு

நடிப்பிலும், பேச்சிலும் பாட்டிலும் நகைச்சுவையோடு பகுத்தறிவுப் பிரசாரத்தையும் சேர்த்து வகையான கலையுணர்வூட்டி வந்த பாரதத்தின் தனிப்பெரும் கலைமாமணி மறைந்துவிட்டதே—இந்த இழப்புக்கு ஈடு உண்டோ என்று அலறித் துடிக்கிறார்கள் பட ரஸிகர்களும் பகுத்தறிவுச் செம்மல்களும்.

### சிந்தனையாளர்

நேரிய போக்கினர், சீரிய சிந்தனையாளர், தென்னாட்டை இந்நாளில் எந்நாட்டுக்கும் முன்னுடாக்கி வைக்க தன்னாலான மட்டும் தொண்டாற்றி வந்த கள்ளமற்ற உள்ளத்தினர், கருணை நெஞ்சத்தினர் காலனின் கையில் அகாலத்தில் சிக்கிக் கொண்டாரே என்று ஓலமிடுகின்றனர் நாட்டுப் பற்றும் முற்போக்கு எண்ணமும்கொண்ட எண்ணற்ற மக்கள்.

வில்லுப் பாட்டில் காந்தித் தாத்தா கதையை சொல்ல நம் கலைவாணர் இல்லையே, மதுவிலக்குப் பிரசாரம் செய்ய நமது என். எஸ். கே. இல்லையே என்று கதறுகிறார்கள் ஏராளமானோர்.

### தானம்

பொதுப் பணிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வேண்டும்போதெல்லாம் வாரி வழங்கும் வள்ளத் தன்மைபெற்ற நம் கலைவாணர் இதுவரை சுமார் 10 லட்சம் அள்ளிக் கொடுத்தது பாழும் இந்தக் காலனுக்குப் பார்க்கப் பொறுக்கவில்லையே—பறித்துவிட்டானே அவரை நம்மிடமிருந்து என்று ஆற்றுனாது அழுது அரற்றுகிறார்கள் ஆயிரமாயிரம் பேர்.

ஒரு வாரம் கடந்த பின் இன்று இந்த நிலையென்றால் அன்று அவர் காலமான ஆகஸ்ட் 30ல் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

### ஆஸ்பத்திரியில்

சென்னை மருத்துவ விடுதியில் மஞ்சள் காமாலை நோய்க்கு சிகிச்சை பெற்று வந்த கலைவாணருக்கு அபாயகரமான நிலை ஏற்படுகிறதென்ற செய்தி வெளியானவுடன் தென் நாட்டுக் கலைஞர்கள், காமராசர், அண்ணா, பக்தவத்ஸலம், நெடுஞ்செழியன் உட்பட ஏராளமான அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள் மற்றும் பிரபலஸ்தர்கள் ஓடோடிச் சென்று படுக்கையில் பிரக்ஞை இழந்து கிடந்த அவரைப் பார்த்தார்கள். பக்கத்தில் புலம்பிக் கொண்டு இருந்த மதுரம் அம்மையாருக்கு ஆறுதல் சொல்ல வேண்டியவர்கள் துக்கம் தாளாது தாமே அழுது ஆற்றுவாரற்று தவித்தார்கள். ஆஸ்பத்திரியை சோகம் கப்பிய முகத்துடன் பொதுமக்கள் முற்றுகையிட்டு நின்றார்கள்.

### மறைவு

டாக்டர்கள் எத்தனைதான் முயன்றும் கலைவாணரை மீட்க முடியவில்லை. காலன் வென்றுவிட்டான். செய்தி வெளியாயிற்று. சென்னை நகரமே அல்லோலகல்லோலப்பட்டது. சோகக் களை அங்கு தட்டியது. என். எஸ். கேயின் பூதஉடல் அவரது தியாகராய நகர் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சாரி சாரியாக மக்கள் சென்று கலைவாணருக்கு தமது இறுதி வணக்கத்தை செலுத்திக்கொண்டார்கள்.

அடுத்த நாள் (31ந் திகதி) கலைவாணரின் பூதவுடல் ஈமக்கிரிகைகளுக்காக மயிலாப்பூர் மயானத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலம் சுமார் இரண்டு மையில் நீளத்தில் இருந்தது. பெருந்தொகையான மக்கள் ஊர்வலத்தில் கலந்து கெண்டதால் ஆயுதந்தாங்கிய பொலீஸார் அங்கு கடமைசெய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

### ரேடியோவில் அழுதார்கள்

கலைவாணர் காலமான அன்று அனுதாபம் தெரிவிக்கு முகமாக சென்னை தியேட்டர்கள் எல்லாம் மூடப்பட்டன. ஸ்டுடியோக்களும் வேலை செய்யவில்லை. ஆல் இந்திய ரேடியோ விசேஷ அனுதாப நிகழ்ச்சியொன்றை மாலையில் ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்ச்சியில் திருவாளர்கள் இரா. நெடுஞ்செழியன், எம். ஜி. ராமச்சந்திரன், கே. சாரங்கபாணி, டி. ஆர்; ராமச்சந்திரன், டி. கே. சண்முகம், எஸ். டி. சுந்தரம், ஏ. வி. மெய்யப்பன் ஆகியோர் என். எஸ். கே.; யைப் பற்றிப் பேசினார்கள். இல்லை ரேடியோவில் அழுதார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

### மனதில் நிலையான இடம்

உழைப்பால் உயர்ந்தவர் என். எஸ். கே. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர். (ஹாஸ்ய)கலைப்பணியேகாலமெல்லாம் செய்து எல்லோர் மனதிலும் நிலையான இடம் பெற்றவர். அவர் இன்று அந்தப்பணியைத் தொடர்ந்து நடத்த நம் மத்தியில் இல்லையே என்று கலங்குபவர்களுக்கும் குறிப்பாக அவர் பிரிவால் ஆற்றுனாது வருந்தும் அவரது கலைத்துணைவி மதுரம் அம்மையாருக்கும் மற்றும் அவரது குடும்பத்தாருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவிக்க இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறோம்.



### கொழும்பில் ''யப்பான்''

நவ நவமான தங்க நகைகளையும், அழகு சொட்டும் இரத்தினாபரணங்களையும் அணிய ஆசைப்படும் கொழும்பு வாழ் ஆரணங்குகளுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

பல வருஷ காலம், புதுப் புது மோஸ்தரான நகை உற்பத்தியில் அனுபவம் வாய்ந்த யாழ்ப்பாணம் யப்பான் ஜுவலர்ஸ் கொழும்பு புதுச் செட்டி தெரு, 163ம் இலக்க இல்லத்தில் சமீபத்தில் தமது கிளையொன்றை ஸ்தாபித்துள்ளார்கள். அங்குஅற்புதமான நகைகள் விற்பனவுக்கு வைக்கப்பட்டுள்ளன; ஆடருக்கும் செய்து கொடுக்கப்படுகின்றன.

யப்பான் நகை மாளிகையின் அதிபரான ''யப்பான்'' என்று அழைக்கப்படும் திரு. ஏ. கனகசபை நகை வியாபார உலகில் கடந்த 30 வருட காலமாகப் பிரபல்யமடைந்துள்ளவராவார். அவருடைய தந்தையார் இதே வியாபாரத்தை யாழ்ப்பாணம் கன்னாதிட்டி றோட்டில் சுமார் 70 வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்தார்.


யாழ்ப்பாணத்திலும் பின்னர் கல்கிசை சென்ட் தொமஸ் கல்லூரியிலும் கல்வி கற்ற திரு. கனகசபை யாழ்ப்பாணம் நகை உற்பத்தியாளர் [illegible] வும், யாழ்ப்பாணத்திலும், ஏனைய நகரிலும் உள்ள பல

(13-ம் பக்கம் பார்க்க)


உன்னதமான உற்பத்தி




எல்லாத் தையல் யந்திரங்களுக்கும்
பின்னல் வேலைகளுக்கும் சிறந்த



பறக்கும் குதிரை மார்க்

நூலை பாவித்துப் பார்த்தீர்களா?

மேற்படி நூல்வகைகள் எவ்வித கைத்தையல் வேலைகட்கும், இல்லங்களில் பாவனையில் இருக்கும் எல்லாவித தையல் (மெஷின்) யந்திரங்களிலும் பொருத்தி தைக்கவும் பின்னல் வேலைகளுக்கும்உகந்தது. மெஷினில்ஓடும்பொழுதுஉடைந்து போகாத பெலமான நூல், சிக்கில்லாததற்கும், பெலத்திற்கும் உத்தரவாதம். பஞ்சு திரட்சி இல்லாதது.

எல்லா வியாபாரிகளிடமும்
எங்கும் கிடைக்கும். கேளுங்கள்.

பறக்கும் குதிரை மார்க் நூல் வகைகள்
ஞாபகமிருக்கட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் மக்கள் வர்த்தகத்தில் ஈடுபடவேண்டும்

## அரசாங்க உத்தியோக மோகம் அடிமைத்தனத்தையே வளர்க்கும்

### மலாயாவில் உள்ள இலங்கைக் கமிஷனர் புத்திமதி

"இலங்கையில் தமிழும் தமிழர் பண்பாடும் இறக்கவே மாட்டா. எனினும், எதிர்காலத்தில், அங்கு வாழும் தமிழ் பேசும் மக்கள் அரசாங்க உத்தியோகங்களை நம்பி அடிமைகளாக வாழ விரும்பாமல் வர்த்தகத் துறைகளில் புகுந்தும், தனிப்பட்ட தொழில்களில் ஈடுபட்டும் சிறக்க வேண்டும்" இவ்வாறு மலேயாவில் உள்ள இலங்கைக் கமிஷனர் திரு. எம். சரவணமுத்து 'இலங்கையின் இன்றைய நிலை' என்னும்பொருள் பற்றி அங்குள்ள இலங்கைத் தமிழர் சங்கத்தில் பேசுகையில் கூறினர்.

திரு. சரவணமுத்து தொடர்ந்து பேசியதாவது:- "இலங்கையில் மொழிப் பிரச்னை இன்றைய முக்கிய பிரச்னையாக விருக்கிறது. ஆயினும் தமிழும் தமிழ்ப் பண்பாடும் இலங்கையிலிருந்து இறந்து விடக்கூடும் என்று யாரும் கவலை கொள்ள வேண்டியதில்லை.

"இன்று உலகில் வாழும் உயர் தனிச் செம் மொழி தமிழ் ஒன்றே. வடக்கிருந்து வந்த வடமொழித் தாக்குதலையும், மேற்கிலிருந்து வந்த டச், போர்த்துக்கீஸ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் நெருக்கத்தையும் தகர்த்தது தமிழ். அப்படிப்பட்ட தமிழைச் சின்னஞ்சிறிய சிங்களம் சின்னபின்னப்படுத்தி விட முடியாது.

"கடந்த பொதுத் தேர்தலின் போது பிரதமர் திரு. பண்டாரநாயகா சரியாகவோ பிழையாகவோ 'சிங்களம் மட்டும்' என்று கூறி விட்டார். அதைக் காப்பாற்ற சட்டம் கொண்டு வந்தார். ஆயினும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அவர் சட்டம் நுழைய முடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. எனவே அப்பகுதிகளில் தமிழ்தான் ஆட்சிமொழி என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று" இவ்வாறு திரு சரவணமுத்து கூறி முடித்தார்.

### பெரிய இடத்தின் சின்னப் புத்தி

தாங்கள் ஆளும் நாடு இமயம் முதல்குமரிவரை விரிந்து பரந்து கிடப்பது பற்றிப் பெருமையடித்துக் கொள்கின்றனர் மேலிடத்துத் தலைவர்கள். ஆனல், இவ்வளவு பெரிய நாட்டை ஆளுவதற்கான பெரிய புத்தியும் தங்களுக்கு வேண்டுமென்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். பெரிய இடத்து மனிதர்களிடம் சின்ன புத்தி இருக்குமானல், தேசத்தின் ஐக்கியம் நெடு நாளைக்கு நிலைத்திராது.

இதைவிடக் கேவலம் இன்னென்றும் உண்டு. அதாவது, "1857" திரைப்படத்தில் தமிழர் புறக்கணிக்கப்பட்டிருப்பதுபற்றி தமிழக ஆட்சியாளர் ஆத்திரம் கொள்ளவில்லை. இந்த அநீதிபற்றி டில்லிக்கு ஆட்சேபக் குறிப்பு எழுதியிருக்க வேண்டியது முதலமைச்சர் காமராசரின கடமை. உதைத்த காலுக்கு முத்தமிடும் புத்தி படைத்தோர் தமிழகத்தை ஆளும் வரை டில்லி ஆட்சி நம்மை உதைத்துக் கொண்டுதான் இருக்கும்.

தமிழகம் தனியரசு பெற்றல் மட்டும் போதாது. தமிழகத்தை ஆள்வோருக்கு தமிழ் இன உணர்ச்சியும் தன்மானச் செருக்கும் வேண்டும்.

—செங்கோல்
1-9-57

# தென்னாட்டுக்கு இழைத்த அநீதி

## பாரத அரசாங்கம் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்

### 'ஆனந்த விகடன' தலையங்கம்

**1857**ம் வருடம் சிப்பாய்க் கலகத்துடன் ஆரம்பித்த இந்திய சுதந்திரப் போரின் நூற்றுண்டு விழா 1957 ஆகிய இவ்வருடம் அனைத்திந்தியாவிலும் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவையொட்டி பாரத அரசாங்கம்—டில்லி ஆட்சி பீடம்—'சுதந்திர யாத்திரை' என்று ஒரு டொக்குமெண்டரி சினியாப் படத்தை வெளியிட்டது. இப்படத்தில் தென்னடு எப்படி முற்றுகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுக்க முடியாத 'நெஞ்சக் கொதிப்போடு' தலையங்கமாகத் தீட்டியிருக்கிறது சென்னையிலிருந்து வெளிவரும் தேசிய வார இதழான "ஆனந்த விகடன்."

"வடநாடு வாழ்கிறது, தென்னடு தேய்கிறது. வடநாடு ஆள்கிறது; தென்னடு அடக்கப்படுகிறது என்றெல்லாம் தமிழ் நாட்டிலிருந்து நாம் குரல்கொடுக்கும்போது அதை வகுப்புவாதக் கூச்சல் என்று வர்ணந் தீட்டிக் காட்டும் 'ஏக இந்தியா'க்களும் ஏமாந்த தேசிய வாதிகளும் இப்போது என்ன சொல்லப் போகிறார்கள்?" — இந்தக் கேள்வியை தி. மு. க. கேட்டால் யார்தான் என்ன பதில் சொல்ல முடியும்?

செப்டம்பர் முதலாந் திகதி வெளியாகிய 'ஆனந்த விகடன்' தலையங்கத்தின் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்.

—ஆசிரியர்.

1857-ம் வருஷம் சிப்பாய்க் கலகத்தில் ஆரம்பித்த சுதந்திரப் போரின் நூற்றுண்டு விழாவைக் கொண்டாடும் தருணத்தில் தமது செய்திப்பட இலாகா 'சுதந்திரயாத்திரை' என்று ஒரு அருமையான படத்தை வெளியிட்டார்கள். அதைத் தென்னட்டு மக்கள் பலர் ஆவலுடன் பார்த்தார்கள். ஆனல் கடைசியில் ஏமாற்றத்துடன் திரும்பினர்கள்.

#### நீண்ட நாள் குறை

"சுதந்திரப் போராட்டத்தில் முதல் முழக்கம் செய்த வீரத் தமிழன் கட்டபொம்மனுக்கு அரசாங்கம் விழா எடுக்கவில்லை; அவனுக்குத் [illegible] அமைக்கவில்லை; அவன் திருவுருவத்தைக் கூட தபால் தலையில் தீட்டவில்லை" என்ற குறை தமிழ் நாட்டில் நெடு நாளாக இருந்து வருகிறது.

"அவர் இருநூறு வருஷங்களுக்கு முன் இருந்த வீரன்; நாங்கள் இந்த நூறு வருஷத்துக்குள் வாழ்ந்த வீரர்களைத்தான் கௌரவிப்போம்" என்று சொன்னர்கள். ஆனல் இந்த நூற்றுண்டைச் சேர்ந்த தென்னட்டுத் திலகங்களையும் இந்தப்படத்தில் சேர்க்க மறந்துவிட்டார்கள். இதை நினைத்தால் நமது நெஞ்சு பொறுக்கவில்லை.

#### ஜி. சுப்பிரமணியஐயர் இல்லை

1883-ம் வருஷத்தில் இந்திய மக்களைத் தட்டி எழுப்பி காங்கிரசை ஆரம்பிக்கச் செய்த ஆங்கிலேயர் ஹியூம் துரை அதில் இருக்கிறர். ஆனல், முதல் காங்கிரசின் முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்த தமிழ் மகன் திரு. ஜி. சுப்ரமணிய அய்யர் அதில் இல்லை.

சுதந்திரப் போரின் படத்தில் மகான் விவேகானந்தர் இருக்கிறர். ஆனல் அவரை அமெரிக்காவுக்கு அனுப்பிய வீரத் தமிழர்கள் யாருமே அந்தப் படத்தில் இடம் பெறவில்லை.

#### லாலா லஜபதி ராய்க்கு அஞ்சலி

பிறகு ராஜாராம் மோஹன்ராய், சி. ஆர். தாஸ், அஜ்மல்கான், டாக்டர் அன்சாரி முதலியவர்களின் படங்கள் எல்லாம் காட்டப்பட்டன. தேசத் தலைவர்களின் திருவுருவங்களைப் பார்க்கும் போதெல்லாம் விகடன் வணக்கம் செலுத்தினன். ஸைமன் கமிஷன் மறியலில் சார்ஜண்ட் ஒருவன் கையால் தடியடிபட்டு மாண்ட லாலா லஜபதி ராய்க்கு அஞ்சலி செய்துவிட்டு, கையைக் குவித்த வண்ணம் விகடன் காத்திருந்தான்.


#### வ. உ. சி. வரவில்லை

செக்கிழுத்த சிதம்பரனர் வருவார். தேசத்துப் போருக்கு திருவிளக்கேற்றிய

(12-ம் பக்கம் பார்க்க)


ஒரு நற் செய்தி !
லதா...
இது ஒரு கேம்பிரிக் புடவை.
- புதுமையானது
- தரத்தில் உயர்ந்தது
- ரகத்தில் சிறந்தது
- பாவனைக்கு உகந்தது

40 வர்ணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
லதா கேம்பிரிக்
அதையே கேட்டு வாங்குங்கள்.
ஏக விநியோகஸ்தர்கள்:
குண்டன்மால்ஸ் லிமிட்.,
26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

மொரிஸன் பம்புகள்

நெருங்கிப் பொருந்திய விவசாயத்திற்குரிய பம்புகள். மண்ணெண்ணையால் தாமே இயங்கவும், நீடித்த பாவனைக்கும் உத்தரவாதமுள்ளவை.
$1\frac{1}{2}$, 2, $2\frac{1}{2}$ அங்குல அளவுகளில் கிடைக்கும்
ஏக விநியோகஸ்தர்கள்:
கே. என். அப்துல் காதர்
ராவுத்தர் அன் கம்பெனி லிமிட்டெட்,
312, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு—10.
டெலிபோன்: 2956. தந்தி; "MEDAL"
வடமாகாண விநியோகஸ்தர்கள்:
ராஜு ஸ்டோர்ஸ்,
2/B, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல்:

# வால் நட்சத்திரங்களின் அமைப்பும் இயல்பும்

## மொத்தம் 1,20,000 சூரிய குடும்பத்தில் இருக்கின்றன

## பூமிக்கு அவற்ருல் ஆபத்து உண்டா?

வால் நட்சத்திரங்கள் ஏன் தோன்றுகின்றன? எப்படித் தோன்றுகின்றன?—என்பதுபற்றிய தத்துவம், இன்னும் திருப்திகரமாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. 1921 ஜூன் மாதம், இப்பரந்த பூமி பான்ஸ்-வின்னக்ஸ் வால் நட்சத்திரத்துடன் மோதிவிடக்கூடிய ஆபத்து ஏற்பட்டது; ஆனல், அந்த வால் நட்சத்திரம் சற்று முன்னதாகவே அதன் அதிசமீப இடத்தைத் தாண்டிவிட்டபடியால் ஆபத்து நேரிடவில்லை. இம்மாதிரியான ஆபத்து 150இலட்சம் ஆண்டிற்கு ஒரு முறை சராசரியாக ஏற்படலாம். எதிர்காலத்தில், இந்த மோதுதல் ஏற்படாது என்ற நிலை இல்லை; ஆனல், அப்படி ஏற்பட்டாலும்கூட, பூமிக்குப் பாதகம் எதுவும் ஏற்படாது. ஏனெனில், வால் நட்சத்திரத்தில் அடங்கிய பொருள்கள் நுண்ணிய பொருள்களாய் இருக்கின்றன.

### பெயர் வரலாறு

வால் நட்சத்திரங்கள், சூரியனின் இழுக்கும் சக்தியால் அடிக்கடி ஆகாயத்தில் காணப்படுகிற பொருள்களாகும். அவைகளுக்கு வால்போல் நீண்ட ஒரு பகுதி இருப்பதால் அவை, வால நட்சத்திரங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. அதன் ஆங்கிலப் பெயரும் ஏறக்குறைய இதே அர்த்தமுள்ளதுதான்.

### எண்ணிக்கை

ஆண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வீதம் இப்போது வால் நட்சத்திரங்கள் காணப்படுகின்றன. 1932-ல் தான் உச்ச எண்ணிக்கை—13 காணப்பட்டது. சூரியக் குடும்பத்தில் சுமார் 1,20,000வால் நட்சத்திரங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, இந்தக் குடும்பத்தில் அவைதான் ஏராளமாக இருக்கின்றன.

### காலமும் தூரமும்

சூரியனுக்கும் வால் நட்சத்திரத்துக்குமுள்ள தூரம் 90,000மைலிலிருந்துகோடி மைல்கள் வரை இருக்கும். அதே போல் அவைகளின் நடமாட்ட காலமும் மூன்றரை ஆண்டுமுதல்10,00,000 ஆண்டுவரை இருக்கும்; சராசரி காலமும் 40,000 ஆண்டுகள்!

### உருவ அமைப்பு

தொலை நோக்கிக் கண்ணுடியில் முதலில் படலம் போன்ற, தெளிவற்ற உருவத்தில் வால் நட்சத்திரம் காணப்படும். பிறகு சற்றுத் துல்லியமானவுடன் மூன்று பகுதி —தலை, மூலக்கரு, வால்—தெரியவரும். தலைப் பகுதி மேகப் படலம்போல் தனி உருவமுள்ளதாய்—ஆனல் கருக்கான விளிம்பில்லாததாய் இருக்கும். மத்தியில் இருக்கும் பிரகாசமான பகுதிதான் மூலக்கரு. அதன் வடிவம் நட்சத்திரம்போல் இருக்கும். தலைப் பகுதியிலிருந்து பிரகாசமான வால் நீண்டு கொண்டிருக்கும். உருளை வடிவமான அந்த வால் எப்போதும் சூரியனுக்கு எதிர்ப்புறமாகவே நீண்டிருக்கும்.

### அளவு

வால் நட்சத்திரங்களின் அளவும் பல்வேறுக இருக்கும். மூலக்கருவின் குறுக்களவு சில நூறு மைல்களிலிருந்து பல ஆயிரம் மைல்கள் வரை இருக்கும். சில சமயங்களில் தலைப்பகுதி பெரிதாக இருக்கும். வெறுங் கண்ணுக்குத் தெரிகிற வால் நட்சத்திரத்தின் வாலின் நீளம் இலட்சக்கணக்கான மைல்களாக இருக்கும்; ஆனல் சில பிரச்னைகளில் அது பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தைக் காட்டிலும் அதிகமாக இருக்கலாம்.

### வால்

அந்த நட்சத்திரத்தின் வால், கதிரியக்க அணுத்துகள்களும் வாயு அணுக்களும் சேர்ந்ததாக இருக்கும். சூரியனிலிருந்து வீசுகிற கதிரியக்க சக்தியும், தலைப் பகுதியிலிருந்து கிளம்புகிற மின்சார எதிர்ப்புச் சக்தியும் காரணமாய், வால், சூரியனுக்கு எதிர்ப்புறமாகவே எப்போதும் இருக்கும்படி அமைகிறது.

---

## நாட்டைக் காக்கும்........

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திடீரென அவள் காதில் ஏதோ ஒரு ஒலி கேட்டது. காதுகள் கூர்மையாயின.

''டம்...டம்...டம்'' எழுந்தாள் அவள். வீதியிலே வீர முரசறைவோன் முரசறைந்துகொண்டிருந்தான். ஆம்! மூன்றும் முறையாக படைக்கு ஆட்களைச் சேர்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஒரு கணம், ஒரேயொரு கணம் அவள் யோசித்தாள். பிறகு உறுதி அடைந்தாள்.

''தம்பி! எழுந்திரடா கண்ணு! விடிந்துவிட்டது''

''ஏன் அம்மா இன்னும் கொஞ்சம் நன்ருகத் தூங்கவிடேன்'' தூக்கக் கலக்கத்தில் அவன் சிறிச் சினந்தான்.

''எழுந்திரடா என்ராஜா. இன்று அவசர வேலை ஒன்று இருக்கிறது''அவனை உலுப்பி எழுப்பிவிட்டாள் அவள்.

இப்போது அவனுக்கும் அந்த முரசொலி கேட்டது. வீரக் குடும்பத்தில் பிறந்த அவனுக்கு அவ்வொலி வீர உணர்ச்சியைக் கொடுத்தது.

அவள் அவனைப் பார்த்தாள். களங்கமற்ற அவன் வதனத்தில்வீரத்தின் சாயைகள் காணப்பட்டன.

அவன் அவளைப் பார்த்தாள். அவளுடைய முகத்தில் மகிழ்ச்சியும் மயக்கமும் மாறி மாறித் தோன்றின! ஒரே மகன் என்பதிஞல், சிறிது நேரம் மயக்கமுற்ருள். ஆனல் அவள் உடலில் ஓடிய வீர இரத்தம் அந்த மயக்கத்தைப் பறக்கடித்தது.

''கண்ணே,இதோ,இதைப் பெற்றுக்கொள்''

அன்னை கொடுத்ததை அன்புப் பணிவுடன் வாங்கினன் அருமை மைந்தன். வெற்றியைக் கொடுக்கும் வீரவேல் அது. வேலைக் கை

(12-ம் பக்கம் பார்க்க)


மணீஸ்

கோப்பி அருந்தி
அதன் ருசியை
அனுபவியுங்கள்

தயாரிப்பாளர்கள்:
மணி மியூஸிக்கல்
ஸ்டோர்ஸ்
145 செட்டியார் தெரு, கொழும்பு

அடை மழையா? கொடூர வெய்யிலா?
எதற்கும் பாதுகாப்பளிப்பது
மான் மார்க் குடைகளே!



★ இலங்கையின் சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்றவாறு கைதேர்ந்த நிபுணர்களால் நிர்மாணிக்கப்பட்டவை மான் மார்க் குடைகளே!

★ அகோர வெப்பத்திலும் அடை மழையிலும் சம்பூரண பாதுகாப்பளிப்பதும் — நீடியகாலம் உழைப்பதற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமானதும் மான் மார்க் குடைகளே!

★ ஆடவர் குடைகள் 25'' அங்குலத்திலும், பெண்டிர் குடைகள் 20'' அங்குலத்திலும் மனத்திருப்தி அளிக்கும் விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:

மெக்கி ஸ்டோர்ஸ்,
265, மெயின் வீதி, கொழும்பு.
61, கொழும்பு வீதி, கண்டி.
154, மெயின் வீதி, காலி,
144, மெயின் வீதி, ரத்தினபுரி,
24, பஜார் வீதி, பதுளை,
11, பஜார் வீதி, குருணைக்கலை.



உண்மையில் என்னை அழகுபடுத்துவது
உலகப்பிரசித்திபெற்ற
'எலைட்'
பினிஷ் ஜார்ஜட்

இன்றைய நவநாகரிக நங்கையரின்
அழகின் அணிகலனுன

'எலைட்' பினிஷ் ஜார்ஜட்

கண்கவர் வர்ணங்களிலும் எடுப்பான
டிசைன்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

சுருங்காது மடிப்புக் குலையாது என்பதற்கு
உத்தரவாதம் பெற்றுள்ளது.

இன்னும் உங்களுடைய சிங்காரமான தோற்றத்தைத் தரக்கூடிய, மேனியை மலரச்செய்ய பலவிதமான நைலோன் போன்ற துணி மணிகள் பெற்றுக் கொள்ளலாம்.

குண்டன்மால்ஸ்
லிமிட்டெட்,
மொத்த விற்பனை ஸ்தாபனம்,
26, கெய்ஸர் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1957 செப்டம்பர் மாதம் 8-ந் திகதி

194 ஏ, தட்டார தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1153

# வர்த்தகம் வளர வழி?

மலேயாவிலுள்ள இலங்கையின் தூதுவர் திரு எம். சரவணமுத்து ஒரு நல்ல புத்திமதியை இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு கூறியுள்ளார்.

"இலங்கையில் தமிழும், தமிழர் பண்பாடும் இறக்கவே மாட்டா. எனினும், எதிர்காலத்தில், அங்கு வாழும் தமிழ் பேசும் மக்கள் அரசாங்க உத்தியோகங்களை நம்பி அடிமைகளாக வாழ விரும்பாமல், வர்த்தகத் துறைகளில் புகுந்தும், தனிப்பட்ட தொழில்களில் ஈடுபட்டும் சிறக்க வேண்டும்" என்பதுதான் திரு சரவணமுத்து கூறியுள்ள புத்திமதியாகும்.

இலங்கையில் தமிழ் வாழுமா, மாளுமா என்பதைப் பற்றி நாம் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் ஆராய்ந்து அபிப்பிராயம் வெளியிட்டுள்ளோம். தமிழ் வாழ வேண்டுமானால் தமிழ் பேசும் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றியும் சாங்கோபாங்கமாக விளக்கியிருக்கிறோம். எனவே அதுபற்றி இப்போது விரிவாக எதுவும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் திரு சரவணமுத்து தொடர்ந்து கூறிய கருத்து இருக்கிறதே—அதாவது 'எதிர்காலத்தில் இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்கள் அரசாங்க உத்தியோகங்களை நம்பி அடிமைகளாக வாழ விரும்பாமல், வர்த்தகத் துறைகளில் புகுந்தும், தனிப்பட்ட தொழில்களில் ஈடுபட்டும் சிறக்கவேண்டும்' என்ற கருத்து, அதைப்பற்றி சில வார்த்தைகள் கூற வேண்டியது அவசியமாகும்.

திரு சரவணமுத்துவின் கூற்றை நாம் எழுத்துக்கு எழுத்து மனப்பூர்வமாக வரவேற்கிறோம் என்பதை முதற்கண் கூறிவிட விரும்புகிறோம். இன்று நாட்டில் வகுப்பு வெறியும், சிங்கள மொழி வெறியும் உருவேற்றப்பட்டு வரும் வேகத்தில் எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்கள் அரசாங்க உத்தியோகத்தைப் பெறுவதும், பெற்றாலும் அதில் சிறந்து, உயர்ந்து விளங்குவதும் துர்லபம் என்பது வெளிப்படை.

ஆங்கிலப் பாஷைமூலமாகத் தமிழ் பேசும் மக்கள் அதிகப்படியான அரசாங்க உத்தியோகங்களைப் பிடித்துக் கொண்டார்கள் என்று சிங்களப் பொதுமக்களிடம் கிளப்பி விடப்பட்ட ஆதாரமற்ற பீதியே "சிங்களம் மட்டும்" சட்டமாகப் பரிணமிப்பதற்குக் காலாய் இருந்தது என்ற உண்மையை உணரக்கூடுமானால் எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்கள் சிங்களம் படித்தாலும் அரசாங்க உத்தியோகங்களைப் பெற முடியாது என்ற இரகசியம் தெற்றெனப் புலனாகும்.

தமிழ் வாலிபர்கள் விவசாயத்திலும், வர்த்தகத்திலும், தொழில் துறைகளிலும் ஈடுபட்டு அவற்றில் சிறப்புற்றோங்குவதுதான் வருங்காலத்தில் அவர்கள் வாழ்வதற்கு ஏற்ற வழியென்பதை மறுக்க முடியாது. மேலைத் தேசங்களில் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் கேவலம், அரசாங்க உத்தியோகங்களுக்காக அலைந்து திரிவதில்லை. பிரிட்டனை எடுத்துக்கொண்டால் அந்த நாட்டுமக்கள் வர்த்தகத்தினாலும், தொழில் உற்பத்தியினாலுமே உலகைக் கட்டியாண்டார்கள் என்ற உண்மை யாவருமறிந்ததே. அமெரிக்கா விவசாயத்தினால் வளம் பெற்றதேயன்றி அங்குள்ள வாலிபன் அரசாங்க உத்தியோகம் பார்த்து ஆளாகவில்லை. இந்த உண்மைகளை உய்த்துணர்ந்து தமிழ் பேசும் மக்களாகிய நாமும் அரசாங்க உத்தியோகத்தில் கொண்டுள்ள அளவுகடந்த மோகத்தைப் படிப்படியாக விட்டொழிக்க வேண்டும்.

ஆயினும் வர்த்தகத்துறையிலும், தொழில் துறைகளிலும் தமிழ் பேசும் மக்கள் ஈடுபட்டு வெற்றி காண்பது இன்று சாத்தியமா? கடந்தகாலத்தில் விரும்பியவர்கள் எல்லாம் வர்த்தகத்துறையில் சுதந்திரமாக ஈடுபட்டு அவரவர் திறமைக்கும் பணப் பலத்திற்கும் தக்கவாறு முன்னேறுவதற்கு சந்தர்ப்பமும் வழியும் இருந்தன. இன்று அப்படியில்லை. வர்த்தகத்துறை இன்று அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குக்கீழ் கொண்டுவரப்பட்டுவிட்டது. சில நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவும், சில சரக்குகளை விற்பனவு செய்யவும், சில பொருட்களை ஏற்றுமதி செய்யவும் அரசாங்கத்தின் தயவை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது; அரசாங்கத்தின் அனுமதியை இறக்குமதி ஏற்றுமதி லைசென்ஸ்கள் என்றும், 'கோட்டா பெர்மிட்டுகள்' என்றும், செலாவணிக் கட்டுப்பாட்டு அங்கீகாரம் என்றும் இன்னோரன்ன வழிகளில் பெற வேண்டியிருக்கிறது. இவைகளை நேர்மையான முறையிலோ, அரசியல் செல்வாக்கைப் பிரயோகித்தோ அன்றி இலஞ்சங் கொடுத்தோ பெற முடியாத துர்ப்பாக்கிய நிலைமையிலுள்ள வர்த்தகர்கள் முன்னேறுவதற்கு வழியேயில்லை.

உதாரணத்திற்குச் சொல்லப்போனால், ஜெர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளிலிருந்து பொருட்களைத் தருவிக்க விரும்பும் வர்த்தகர்கள் முதலில் தங்களை "இலங்கை வர்த்தகர்கள்" என்று அரசாங்கத்திடம் பதிவு செய்துகொள்ள வேண்டியிருக்கிறது.

ஜப்பான் பொருட்கள் மலிவானவையாகவும், ஜெர்மன் பொருட்கள் திறமையும் உறுதியும் வாய்ந்தவையாகவும் இருப்பதால் இந்த நாடுகளிலிருந்து தருவிக்கும் பொருட்களுக்கே மார்க்கெட்டில் கிராக்கியுண்டு. ஏனைய நாடுகளிலிருந்து கட்டுப்பாடு இல்லாமல் பொருட்களைத் தருவிக்கும் வர்த்தகர்கள் "இலங்கை வர்த்தகர்"கள் என்று பதிவு செய்துகொண்டவர்களோடு போட்டி போட முடிவதில்லை. பெரும்பாலும் நஷ்டத்துக்கும் உள்ளாகிறார்கள்.

இலங்கை வர்த்தகர்களாகப் பதிவு செய்வதற்குப் பல அரசாங்கத் தடைகளைத் தாண்டியாக வேண்டும். விண்ணப்பதாரர் முதலில் தம்மை ஒரு இலங்கையின் பிரஜை என்று நிரூபிக்க வேண்டும். பின்பு வங்கியில் அவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை இருப்பில் இருக்க வேண்டும். அவர் கடை வாடகைக் கண்டி யானல் அது இலங்கைப் பிரஜை ஒருவரின் கடையாயிருக்க வேண்டும். கடையில் வேலை பார்க்கும் சிப்பந்திகள் இலங்கைப் பிரஜைகளாய் இருக்க வேண்டும். வியாபாரம் செய்ய போதிய இடவசதியும், ஸ்டோர் வசதியும் இருக்க வேண்டும். இப்படிப் பலப் பல விதிகள். விண்ணப்பதாரர் இந்தத் தகுதிகள் எல்லாம் உடையவரா என்பதைத் தீர்மானிப்பதற்கு சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டதிகாரிக்கு உசிதாசார அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த உசிதாசார அதிகாரம் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருகிறதெனபதற்கு எத்தனையோ சான்றுகள் காட்டப்படுகின்றன. சிங்களவராயிருந்தால் அவர் கேள்வி பதில் எதுவுமில்லாமலே இலங்கைப் பிரஜையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார். ஏனைய விதிகளைப் பொறுத்தவரையிலும் தாராளமான சலுகைகள் காட்டப்படுகின்றனவாம். தமிழராயிருந்தால் அவர் "இலங்கை வர்த்தகரா"கப் பதிவு செய்யப்படுவது ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவதைப்போல் இருக்கிறதாம்.

இதன் இரகசியம் என்னவென்றால் வர்த்தகத் துறையிலும் தமிழ் பேசும் மக்கள் புகுந்துகொள்ள முடியாதபடி தடுத்து இந்நாட்டின் வர்த்தகத்தைச் சர்வசிங்கள மயமாக்க வர்த்தக அமைச்சர் திரு ஆர். ஜி. சேனநாயகாபோன்றவர்கள் சதி செய்து வருவதாகத் தெரிகிறது. தொழில் துறைகளிலும் தமிழ் பேசும் மக்கள் முன்னேறுதபடி தடுப்பதற்கு இப்படியான முட்டுக்கட்டைகள் போடப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது.

இவற்றிலிருந்து நாம் அடையும் முடிவு என்னவென்றால், வர்த்தகத்துறைகளிலும், தொழில் துறைகளிலும் தமிழ் பேசும் மக்கள் முன்னேறுவதற்கும்கூட, தமிழ்பேசும் மக்கள் வாழும்பகுதிகளின் ஆட்சிப் பொறுப்பு தமிழ் பேசும்மக்கள் கைக்கு மாற வேண்டும் என்பதாகும். அப்படி மாறினால்தான் அரசாங்க உத்தியோகம்போன்றவைகளிலும் வர்த்தகம், தொழில் ஆகிய துறைகளிலேனும் தமிழ் பேசும் மக்கள் தலை தூக்கக்கூடியதாகவிருக்கும். இத்தகைய ஒரு சுயாட்சி நிலை ஏற்படும்வரை தமிழரசுக் கட்சியினர் வேறு வழிகளில் தமிழ் பேசும் மக்களைக் கைதூக்கிவிடக்கூடிய ஏற்பாடுகளில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

அதாவது தமிழரசுக் கட்சி தகுதிவாய்ந்த சட்ட நிபுணர்களையும், பாராளுமன்றப் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு பொருளாதாரக் குழுவை உடனடியாக அமைத்து, வர்த்தகத் துறைகளிலும், தொழில் துறைகளிலும் ஈடுபட விரும்பும் தமிழ் பேசும் மக்கள் சார்பில் அரசாங்கத்துடனும் சம்பந்தப்பட்ட இலாகாக்களுடனும் வாதாடி, அவர்களுக்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் தமிழ் பேசும் மக்களின் பொருளாதாரம் வெகுசீக்கிரம் பொலபொலத்துவிடும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

# ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பேசாத பேச்சுக்கள்!

# பத்திரிகைகளில் வெளிவரும் விந்தையான மர்மம்

## இணுவிலில் நடந்த இரகசியக் கூட்டம்: தலை தப்பினது தம்பிரான் புண்ணியம்

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

சுதந்திரன் வாசகர்கள் மகா பொல்லாதவர்கள்! இல்லாததையும், நடவாததையும் சொல்லி அவர்களை எளிதில் ஏமாற்றிவிட முடியாது. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு" என்ற குறள் நெறியைக் கடைப்பிடிக்கும் பண்பு வாய்ந்த வாசகர்களைப் பெற்றிருப்பது சுதந்திரனுக்குக் கிடைத்துள்ள பெரும் பாக்கியமாகும். அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான சுதந்திரன் சொன்னால் கூட, இம்மியளவு சந்தேகம் ஏற்பட்டாலும் அவர்கள் உடனே எழுதிக் கேட்டு விடுவார்கள் எனவேதான நாம் செய்திகளை வெளியிடும் போதும், அரசியல் விமர்சனங்களைத் தீட்டும் போதும் விசேஷித்த கவனம், செலுத்தி அவை எவ்வளவு தூரம் உண்மையை அடிப் படையாகக் கொண்டவை என்பதை நிர்ணயித்துக் கொள்கிறோம். இப்படிச் செய்வதனால்தான் சுதந்திரன் முன் கூட்டியே வெளியிடும் தகவல்கள் எல்லாம் ஒன்று கூடப் பிழைக்காமல் பின்னால் அப்படியப்படியே சம்பவித்து வந்திருக்கின்றன. இதை நமது வாசக நேயர்களே மகிழ்ச்சியோடு ஒப்புக் கொள்வார்கள்.

### சுதந்திரன் முல்லைத்தீவு செய்தி

இரண்டு வாரங்களுக்கு முன்பு—சுதந்திரன் 25-8-57 இதழில்—ஜீ. ஜீ. யின் முல்லைத்தீவுக் கூட்டத்தில் குழப்பம். கேள்விகளுக்குப் பதில் சொல்ல மழுப்பியதால் மக்கள் ஆத்திரம். காரில் ஏறிக் கொண்டு ஓடித்தப்பினார் என்று ஒரு செய்தியை முதல் பக்கத்தில் வெளியிட்டிருந்தோம்.

இந்தக் குழப்ப செய்தி வேறு எந்தப் பத்திரிகையிலும்—தினப் பத்திரிகைகளில் கூட—வெளியாகவில்லை. இதற்கு மாறாக தினகரனிலும் வீரகேசரியிலும், திருவாளர் பொன்னம்பலம் முல்லைத்தீவில் கூட்டம் போட்டதாகவும் அங்கு அவர் பிரசங்கம் செய்ததாகவும் குறிப்பிட்டு நீண்டதொரு பிரசங்கத்தையும் வெளியிட்டிருந்தன.

இந்தச் செய்திகளைப் பார்த்து விட்டு மட்டக்களப்பிலிருந்து சுதந்திரன் வாசக நேயர் ஒருவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"சுதந்திரனில் திரு. ஜீ. ஜீ. யின் முல்லைத்தீவுக் கூட்டம் குழப்பத்தில் முடிந்ததாக செய்தி வெளியிட்டீர்கள். ஆனால் வீரகேசரியிலும் தினகரனிலும் திரு. ஜீ. ஜீ. பேசியதாக நீண்ட பிரசங்கம் வெளியிடப்பட்டுள்ளது. இவற்றில் எது சரி?"

### ஜீ. ஜீயின் தந்திரங்களில் சில

பத்திரிகைகளில் செய்திகளும், அறிக்கைகளும் வெளியிடுவதில் திரு. ஜீ. ஜீ. அனுஷ்டிக்கும் தகிடு தத்தங்கள் ஜகப்பிரசித்தமானவை. கூட்டத்துக்குப் போகு முன்பே தமது பேச்சை எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவிட்டுக் கூட்டங்களுக்குப் போவதும், கூட்டத்தில் போய் வேறொன்று பேசுவதும், கூட்டத்தில் ஒன்றைப் பேசிவிட்டுவந்து பத்திரிகைகளுக்கு வேறொன்றை எழுதிக் கொடுப்பதும் திரு. பொன்னம்பலம் நீண்டகாலமாகக் கையாண்டுவரும் பல தந்திரங்களில் சிலவாகும்.

### வெளுத்து வாங்கினார்

1948ம் ஆண்டில் திரு. பொன்னம்பலம் காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகாவின மந்திரி சபையில் சேருவதற்காக இரகசியமாக அவருடன் கொழும்பில் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களை மட்டக்களப்பில் உள்ள சில அங்கு அழைத்திருந்தார்கள். திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், வி. குமாரசாமி ஆகியோர் அங்கு போனார்கள். மட்டக்களப்பு மைதானத்தில் கூட்டம் நடைபெற்றது. திரு. பொன்னம்பலம், யு. என். பியைத் தாக்கித் தாறுமாறாகப் பேசிக் கரகோஷம் வாங்கினார். "சுந்தரலிங்கம் என்ற சுண்டைக்காயும், சூ. நடேசன் என்ற வாழைக்காயும் சேர்ந்து சாம்பார் கட்டி யு. என். பி. கட்சி" என்று வெளுத்து வாங்கினார்.

திரு. வி. குமாரசாமி பேசுகையில் "ஐயம்பிள்ளை அண்ணையின் தேங்காய்க் கடை போன்றது யு. என். பி கட்சி. அதில் மொட்டைத் தேங்காய்களுமுண்டு. குடுமித் தேங்காய்களும் உண்டு" என்று கிண்டல் செய்தார்.

### மாறுபட்ட பத்திரிகை செய்தி

மறுநாள் காலையில் வெளியான 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் திரு பொன்னம்பலம் மட்டக்களப்பு கூட்டத்தில் கொம்யூனிஸ்ட் கட்சியையும், பீட்டர் கெனமனையும் தாக்கு தாக்கென்று தாக்கி அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்தெறிந்ததாக நவ்ட பிரசங்கம் வெளியிடப்பட்டிருந்தது. இவ்வளவுக்கும் திரு. பொன்னம்பலம், மட்டக்களப்புக் கூட்டத்தில் கொம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி ஒருவார்த்தை கூடப் குறிப்பிட்டுப் பேசவில்லை!

நடந்தது என்னவென்றால் மட்டக்களப்புக்குப் போவதற்கு முன்னரே திரு. பொன்னம்பலம் தமது பேச்சை கொம்யூனிஸ்ட் கட்சிக் கண்டனப் பேச்சை—டைப் அடித்து 'டெய்லிநியூஸ்' பத்திரிகைக்குக் கொடுத்து விட்டுப் போய்விட்டார்.

(12ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பிரசுரங்களைத் தாமதிக்க அதிகாரிகள் சதியா?

## அல்லது தமிழ்ப் பகுதி ஊழியர்கள் உறங்கிக் கிடக்கிறார்களா?

### அரசாங்க மொழி இலாகா பற்றி தமிழ்ப் பொது மக்கள் சந்தேகம்

(சுதந்திரன் நிருபர்)

அரசாங்க மொழி இலாகாவினால் வெளியிடப்பட வேண்டிய தமிழ் பிரசுரங்களை அனாவசியமாகத் தாமதித்து ஈற்றில் வெளியீட்டை நிறுத்தி விட அங்குள்ள சிங்கள மேலதிகாரிகள் முயற்சித்து வருகிறார்களோ என்ற சந்தேகம் கிளப்பப்பட்டிருக்கிறது. ஏற்கனவே எத்தனையோ தமிழ்ப் பிரதிகள், தமிழ்த் தொகுதிகள் சரிபார்த்து முடிந்தும் அவை இன்னும் அச்சகத்திற்கு அனுப்பப்படாமல் தடைபோட்டு நிறுத்தப்பட்டிருப்பதன் மர்மம் என்ன?

இவ்வாரம் சட்டத்துறைக்குரிய சொற் தொகுதி சிங்களத்தில் அச்சாகி உபயோகத்துக்கு வெளிவந்து விட்டதாக செய்திகள் கூறுகின்றன. ஆனால் தமிழிலே சட்டத்துறைக்குரிய சொற் தொகுதியின் தயாரிப்பு வேலைகள்தானும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை யென்று தெரிய வருகிறது.

இருபது அரசாங்க இலாகாக்களில் வழங்கப்படும் சொற்தொகுதி, சிங்கள மொழியில், அழகான நூல் வடிவல், கடந்த ஆண்டே வெளிவந்துவிட்டது. ஆனால் தமிழில் இன்னும் வெளிவரவில்லை. இத் தொகுதியின் கைப் பிரதி அச்சகத்திற்கு அனுப்பப்படாமல் காரியாலயத்திலேயே இன்னும் தூங்கிக்கிடக்கிறதென்று தெரிகிறது.

தமிழ் தொகுதியை ஊறுகாய் போட்டு வைக்கக் காரணம் என்ன? அங்குள்ள தமிழ்ப் பகுதி உத்தியோகஸ்தர்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் தங்கள் வேலைகளைச் சரிவரச் செய்யவில்லையா? அல்லது மேலதிகாரிகள் தடைபோட்டுத் தாமதிக்கச் செய்கிறார்களா? இப்படியான கேள்விகள் தமிழ்ப் பொது மக்களிடையேயிருந்து கிளம்புகின்றன.

## வேதனையை விலை கொடுத்து.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தியாலயத் தலைமை ஆசிரியருமான திரு. கு. வி. செல்லத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

### கல்வி அமைச்சர் சிபார்சு

கல்வி அமைச்சர் திரு தஹநாயகா அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ள ஒரு மகஜரில், ஆசிரியர்களின் சேவையை அனுசரித்தே அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படவேண்டும் என்றும், சம்பள விஷயத்தில் அவர்கள் வகிக்கும் பதவிக்கு மதிப்பளிக்கக் கூடாதென்றும், சேவையில் கூடியவருக்கே தலைமை ஆசிரியர் பதவி அளிக்கப்படவேண்டும் என்ற பழைய முறையை மாற்றி ஊக்கமும் உற்சாகமுமுள்ள இளம் ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்க வசதி செய்ய வேண்டும் என்றும், அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ரூ. 25 போனஸாகக் கொடுபடவேண்டுமென்றும் சிபார்சுசெய்துள்ளாராம்.

கல்வி அமைச்சரின் மேற்படி சிபார்சைப்பற்றி திரு. செல்வத்துரை சுதந்திரன் நிருபருக்களித்த ஒரு பேட்டியின்போது தொடர்ந்து கூறியதாவது:

### தன்னைக் காட்டிக்கொள்ள...

"கல்வி மந்திரியார் சமர்ப்பித்துள்ளதாகக் கூறப்படும் மகஜர் ஆசிரிய உலகின் கவனத்தை வெகுவாக ஈர்க்கும் என்பது உண்மை. மக்கள் கண்ணில் அடிக்கடி தம்மைக் காட்டிக்கொள்வதில் நாட்டங்கொண்ட கல்வி அமைச்சர், இவ்வறிக்கையின் மூலமாக அதே காரியத்தைச் செய்ய முயற்சித்துள்ளார்.

### சிக்கல்கள் ஏற்படும்

"ஆசிரியர்களுக்கு அவர்களின் சேவையை அனுசரித்து சம்பளம் கொடுக்கப்படவேண்டுமேயொழிய அவர்கள் வகிக்கும் பதவியை அனுசரித்துச் சம்பளம் கொடுக்கப்படலாகாது என்ற கல்வி அமைச்சரின் சிபார்சு வரவேற்கக்கூடியது. அதனோடு தலைமை ஆசிரியர் பதவி வகிப்பவர்களுக்கு மாதாந்த போனஸ் வழங்கும் திட்டமும் பாராட்டக் கூடியதே. பதவி உயர்வு சிலருக்குத்தான் கிடைக்கிறது. அதனால் சிலரே சம்பள உயர்வையும் பெறமுடிகிறது. சேவையை அனுசரித்துச் சம்பள உயர்வு என்றால் அது எல்லோருக்கும் பயன்படும். எனவே சேவைகாலத்தை நோக்கி சம்பளம் கொடுப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் சேவையை அனுசரிக்காமல், திறமையைத்தேடிப்பிடித்து உற்சாகமும் உயர்வும் அளிப்பது என்ற திட்டம் இன்றைய நடைமுறையில் பல சிக்கல்களை உண்டாக்கக்கூடியதாகும்.

### சேவையையும்வயதையும் கவனிக்க வேண்டும்

"ஒரு ஆசிரியருடைய போதனுதிறமை வேறு, நிர்வாகத்திறமை வேறு. நிர்வாகத்திறமை உடையவரே தலைமை ஆசிரியராகக் கடமை பார்க்கத் தகுதியுள்ளவராவர். நிர்வாகத் திறமை நீண்டகால சேவையின் பயனாகக் கிடைக்கும் அனுபவத்தினாலும், வயதினாலும் வருவதாகும். எனவே சேவையையும், வயதையும் புறக்கணித்து, நிர்வாகப் பதவியான தலைமை ஆசிரியர் பதவியை உணர்ச்சிவசப்பட்ட இளைஞர்களிடம் ஒப்படைப்பது உகந்ததா என்பதை நன்கு ஆலோசியாமல் முடிவுசெய்வது ஆபத்தானதாகும்.

### திட்டம் துஷ்பிரயோகமாக வழி

"எல்லா ஆசிரியர்களும் ஒரு பாங்கான கல்வித் தராதரம் உடையவர்களாக இருக்கும்போது, இவர்களிடையே "ஒரு விசேஷ திறமை"யைக் கல்வி அமைச்சர் எப்படிக்கண்டு பிடித்துத் தீர்மானிக்கப் போகிறார்? அரசாங்க ஊழியர்களான குமாஸ்தாக்களுக்கு வைப்பது போன்ற 'தகுதி காண் பரீட்சை'களை (Efficiency Bar) நடத்தினாலன்றி இது சாத்தியமாகாது. அப்படிப் பரீட்சை நடத்தித் தீர்மானிப்பதானால் எவரும் கல்வி அமைச்சரின் திட்டத்தை ஆட்சேபிப்பதற்கில்லை; ஒருமுகமாக வரவேற்கலாம். தகுதி காண் பரீட்சைகளை நடத்தாமல் வெறும் சிபார்சுகளின் பேரில் உயர்வளிப்பதானால் உண்மையான தகுதியும் திறமையும் வாய்ந்த ஆசிரியர்கள் ஒதுக்கப்பட்டு, பாடசாலை இன்ஸ்பெக்டர்களுக்கும், முகாமைக்காரர்களுக்கும், இதர அதிகாரிகளுக்கும், அரசியல் வாதிகளுக்கும் வால் பிடிக்கும் ஆசிரியர்களே பதவி உயர்வு பெற இடமேற்படும். இது கல்வி அமைச்சரின் திட்டம் முழுவதும் துஷ்பிரயோகம் ஆவதற்கு இடமளிக்கும்.

### யாருக்கும் நன்மை இல்லை

"இந்த நிலையேற்பட்டால் ஒரே ஸ்தாபனத்தில், ஒரே கிராமத்தில் கடமை பார்க்கும் ஆசிரியர்களுக்கிடையே போட்டியும், பொறாமையும், குரோதமும், விரோதமும் தான் தலைதூக்கும். ஆசிரியர் சமூகத்தின் ஒற்றுமையும், கட்டுப்பாடும், சங்க அமைப்புகளும் சின்னாபின்னப்பட்டுவிடும். இதனால் ஆசிரியர்களுக்கும் நன்மை இல்லை; பிள்ளைகளுக்கும் நன்மை இல்லை; மக்களுக்கும்

(13ம் பக்கம் பார்க்க)

## ஐனுப் முஸ்தபா...


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என். நவரத்தினமும் ஒருவராவர்.

இதன் பின்னர் தா. பு. இயக்கத்தின் இலங்கைக் கிளையினர் மேலும் 16 பிரதிநிதிகளைச் சேர்த்து தூது கோஷ்டியை 30 பேர் கொண்டதாக ஆக்க முயற்சித்தனர். எனவே ஐனுப் முஸ்தபா போன்றவர்களின பெயர்களையும் சிபார்சு செய்தனர். அவர்களுக்கும் பிரயாண செலவுகள் கொடுக்கும்படி தலைமை நிலையத்தைக் கேட்டுக் கொண்டனர். இலவசப் பிரயாணம் கிடைத்தால் தாமும் அமெரிக்காவுக்குப் போய்வரலாம் என்றுதான் ஐனுப் முஸ்தபாவும் காத்துக் கொண்டிருந்தார்.

ஆனால் தலைமை நிலையத்தினர் 14 பேர்களுக்கு மேல யாருக்கும் இலவசப் போக்குவரத்து வசதி பண்ண முடியாது என்று கண்டிப்பாக அறிவித்து விட்டனர். இந்த ஏமாற்றச் செய்தி கிடைத்ததும் "கிட்டாதாயின் வெட்டென மற" என்ற தத்துவத்தின் படி ஐனுப் முஸ்தபா கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக "சொந்த அலுவல்கள் காரணமாக நான் அமெரிக்காவுக்குப் போக முடியவில்லை" [illegible] வெளியிட வேண்டியதாயிற்று என்று தெரிகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# இரட்டைக் குழந்தைகள்

— பா. பாலேஸ்வரி

அலுவலகத்திலிருந்து திரும்பிய ரகு தன் தாய் கொடுத்த காப்பியை ஒரே மூச்சில் குடித்துவிட்டு அவசர அவசரமாக, "அம்மா அண்ணா வந்துவிட்டானா?" என்று கேட்டான்.

"மணி இன்று சற்றுத் தாமதமாகவே வருவதாகக் கூறிச் சென்றான். ஏதாவது அவசரமான செய்தி உண்டாப்பா?" என்றாள் தாய்.

அவனை ஒருமுறை நன்றாகக் கூர்ந்து பார்த்துவிட்டு, "அம்மா அண்ணாவை இப்போ பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் உங்களிடம் ஒரு விஷயம் பேச வேண்டும்........." என்றான். அவனுடைய பேச்சில் அவசரத்தோடு ஆத்திரமும் கலந்திருந்தது.

"என்னப்பா புதிர் போடுகிறாய் ஒருநாளும் இல்லாத விதமாக.........ஏன் என்னுடன் பேசுவதற்கு அனுமதியா வேண்டும்?

"நீங்கள் என்னைத் தவறாக நினைத்துவிட்டால்?"

"என்ன ரகு பேசுவதை விபரமாகப் பேசு. தாயும் பிள்ளையும் பேசுவதில் என்னப்பா தவறு ஏற்படப் போகிறது?" என்று அவள் மீண்டும் கூறினாலும் அவளது அடிமனதில் ஒரு பெரிய திகில் உண்டாகியது. ஒரு வேளை மணியின் பிறப்பு வளர்ப்புபற்றி ஏதாவது அறிய ஆசைப்படுகிறானோ? அதை நினைத்தபோது அவளது நெஞ்சம் ஒருமுறை "டக் டக்" என்று பலமாக அடித்தது. அவளது உடல் முழுவதும் முத்துப்போன்ற வியர்வைத் துளிகள் அரும்பின. ஆனாலும் தனது பதஷ்டத்தை மறைத்து நிலைமையைச் சாதுரியமாகச் சமாளித்துக்கொண்டாள்.

"அம்மா மணி என்கூடப் பிறந்த அண்ணாவா?" அவன் கேட்டான்.

லதாவிற்கு உலகமே சுற்றியது. ஒருகணம் அவள் மனம் பட்ட வேதனை? அப்பப்பா! சொல்லிவிட முடியாது. அவள் பதில் சொல்லவில்லை.

"அம்மா! இருபது வருட காலமாக என் உடன்பிறந்த அண்ணா என்றுதான் நம்பி வாழ்ந்தேன். இனிமேலும் அந்த உறவை ஒரு சிறிதும் நான் மாற்றேன். ஆனால் எனக்கு இன்று ஏற்பட்ட இந்தச் சந்தேகந் தெளிய வேண்டும்!"

லதாவிற்கு என்ன சொலவதென்றே புரியவில்லை. மரணப் படுக்கையில் தன் கையைப்பற்றி தனது கணவன் கேட்ட அந்த வாக்குறுதி அவளது காதுகளில் எதிரொலித்தது.

★

அப்போது லதா அநாதை. தனது சிற்றறிவைக் கொண்டு சில குழந்தைகளுக்கு 'ரியூஷன்' சொல்லிக் கொடுத்து தன் வாழ்நாளை மிகவும் கஷ்டமாகக் கழித்தாள். ஓய்வு நேரங்களில் நிறைய வாசிப்பாள். புத்தகமென்றால் அவளுக்கு உயிர் 'திடீர்' என்று அவளுக்குத் தானும் எழுத வேண்டும் என்ற ஒரு அற்ப ஆசை ஏற்பட்டது. அவள் ஆசையும் வீண்போகவில்லை. பல பத்திரிகைகளுக்குச் சிறு கதைகள் எழுதி அனுப்புவாள். ஆனால் அவள் எதிர்பார்த்ததற்கு ஏமாற்றமே காத்திருந்தது. எனினும் அவள் தன் முயற்சியைக் கைவிடவில்லை. மீண்டும் மீண்டும் எழுதினாள். அவளுடைய அயராத முயற்சி வீண்போகவில்லை. அவளது கதைகளில் ஒன்று பத்திரிகைகளில் வெளிவந்தது. அதற்குக் கிடைத்த அமோக பாராட்டின் காரணமாக அவள் எழுதிய மற்றும் சில கதைகள் வெளிவந்தன. கடைசியாக அவள் எழுதிய கதை சிறந்தனை. அவளுக்கு மிகவும் புகழ் வாங்கித் தந்தது இக் கதையேதான். இல்லை! அவளுக்கு வாழ்வளித்ததுகூட இச்சிறு கதையேதான். அவளது இச்சிறு கதையைப் படித்த பல ரஸிகர்கள் அவளை நேர்முகமாகவும் பேனாமூலமாகவும் பாராட்டினார்கள்.

அப்படி நேரில் சந்தித்துப் பாராட்ட வந்தவர்களில் ஒருவன்தான் சுகுமார். அவன் லதாவிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தான். தான் இத்தனை காலமாகத் தேடித் திரிந்த இலட்சிய மனைவி லதாதான் என அவனது அந்தராத்மா கூறியது. அவர்கள் உறவு ஈற்றில் அவர்களைச் சதிபதிகளாக்கியது.

அன்றுதான் அவர்கள் மணமாகிய புனித நாள். முதல் இரவு தனிமையில் இருவர் உள்ளமும் ஒருமித்து வாழ்க்கைப் படகை நகரச் செய்ய வேண்டிய நன்னாள். மணச் சடங்குகள் எல்லாம் ஒருவாறு ஒப்பேறிய பின் லதா தன் கணவன் வருகையை வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள். சுகுமார் வருவார், அவருடன் எப்படிப் பேசுவது—எதைப் பேசுவது என்று ஆராய்ச்சி பண்ணி முடிவுக்கு வரும் கட்டத்தில் அவள் இருந்தாள். அவன் வராமற் கழிந்த அந்த ஒவ்வொரு நிமிடமும் அவளுக்கு யுகங்களாகக் கழிந்தன. மணித்தியாலங்களும் ஒன்று, இரண்டு என்று விரைவாகச் சென்றன, லதாவிற்கு ஒன்றும் புரியவில்லை. வெளியிற் சென்று பார்க்கலாம் என்றால் அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது. தனிமையிற் தூக்கம் வேறு தொல்லை கொடுத்தது. இதற்கிடையில் கதவு திறக்கும் சத்தங் கேட்டு நிமிர்ந்தாள். அங்கு பூனையைப்போல் அடிமேல் அடிவைத்து வந்துகொண்டிருந்தான் சுகுமார்.

சுகுமாரின் முகம் பேயறைந்ததுபோல வெளுத்திருந்தது. மனச்சாட்சி அவ[illegible] மனதில் இருப்பதை எப்படி அவளிடம் கூறுவது? மணமான முதல் இரவில் இதையா அவள் எதிர்பார்த்தாள்? இன்றைய இரவைக் கழித்துவிட்டு நாளை சொல்லலாம் என்றால் மனம் இடங்கொடுக்கவில்லை. ஆனாலும் தைரியத்தை வலிய வரவழைத்துக்கொண்டான். மெதுவாக அங்கு அவர்களுக்கு மத்தியில் எதிரியாக இருந்து எரிந்துகொண்டிருந்த மின் விளக்கின் பொத்தானைப் பிடித்து அமுக்கினான். அவனது உள்ளத்தைப் போல் அறையிலும் எங்கும் இருள் சூழ்ந்தது. படுக்கையின் அருகே சென்று லதாவின் பக்கத்தில் உட்கார்ந்து அவளது கரங்களை மெதுவாக வருடிக்கொண்டே "லதா" என்று அழைத்தான். அவளுக்குத் தான் எங்கிருக்கிறோம் என்ற உணர்ச்சியே இல்லை. அவள் ஒன்றுமே கூறத் தெம்பில்லாதவளாய் தன் முகத்தை அவனது மார்பிற் புதைத்தாள். அவள் விட்ட அந்த உஷ்ணமான மூச்சு சுகுமாரை இன்னும் கலவரமாக்கியது. அவன் மனம் பட்டபாடு...?" தேனை எதிர்பார்த்திருக்கும் ஒருவனுக்குப் புளிங்காடி கிடைத்தால்? இன்பத்தை எதிர்பார்த்திருக்கும் அவளுக்கு தான் கூறப்போகும் இந்த விடயம் எவ்வளவு பெரிய பேரிடியாக இருக்கும்! அதற்காக நான் உண்மையை ஒளிப்பதா? ஒளித்தாலும் ஒரு நாளைக்கு அது வெளிப்படாமல் இருக்குமா?" அவன் மனப் போராட்டம் ஓய்ந்தது. ஒருவாறு தன்னைச் சமாளித்து தன் மார்பிற் புதைந்திருந்த அவளது முகத்தை நிமிர்த்தி அவளது கேசத்தை வருடியவாறே மீண்டும் "லதா" என்று அன்பொழுக அழைத்தான்.

"ம்.........." இது லதாவின் அடித்தொண்டையில் இருந்து புறப்பட்ட பதில்.

"லதா! நான் உனக்குப் பெரிய துரோகஞ் செய்துவிட்டேன். இத்தனை நாளும் உன்னிடமிருந்து ஒரு முக்கியமான விஷயத்தை மறைத்துவிட்டேன். ஆனால் இன்று முதலாக நீ என் ஆசை மனைவி. இனியும் உன்னிடம் அதை மறைப்பது உசிதமல்ல. அதற்காக என்னை மன்னித்துவிடு"

லதாவிற்கு ஒன்றுமே புரியவில்லை. பதஷ்டம் ஏற்பட்டது. ஆனாலும் சுகுமார் கூறப்போகும் அந்த விஷயத்தை ஆவலுடன் எதிர்பார்த்தாள்.

"லதா என்னை மன்னிப்பாயா?"

அவளின் பதஷ்டம் அதிகரித்தது. இதனால் முதலிரவில் மணப் பெண்ணுக்கு இருக்கக்கூடிய மௌனம் அவளிடமிருந்து பிரிந்துவிட்டது. "எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! ஏதோ மறைத்துவிட்டேன் என்றீர்கள். இப்போ மன்னிக்க வேண்டுகிறீர்கள்! இதெல்லாம் என்ன புதிர்?"

"லதா! சொல்லிவிடுகிறேன். மனதைத் திடப்படுத்திக்கொள். எனக்கு ஏற்கனவே ஓர் குழந்தையுண்டு. அதை........." அவன் முடிக்கவில்லை.

அவளுக்கு 'திக்' என்று இருந்தது. உடம்பில் ஆயிரம் வேல் கொண்டு குத்துவதுபோல் இருந்தது.


"என்ன குழந்தையா? அப்படியானால் உங்கள் மனைவி? நீங்கள் மணம் புரிந்தவர் என்று என்னிடம் இதுவரை கூறவில்லையே? என் வாழ்க்கையில் இன்ப சூரியன் உதயமாகிவிட்டான் என்று கனவு கண்டேன். ஆனால் அது பகற் கனவாகிவிட்டதே. என்னை மோசஞ் செய்ய வேண்டும் என்று எத்தனை நாட்களாகத் திட்டமிட்டிருந்தீர்கள்? கற்பனையில் கதைகள் உருவாக்கும் நான் கடைசியாக உங்கள் கதையில் ஏமாந்துவிட்டேன். ஆமாம்! புருஷர்கள் எல்லாம் ஒரே மாலையிற் கோத்த மணிகள் தானே?" அவள் ஆத்திரத்தில் இப்படி வார்த்தைகளை அடுக்கிக்கொண்டுபோனாள்.

"லதா! நான் உன்னை மோசஞ் செய்யவேண்டும் என்று கனவிற்கூட கருதியது கிடையாது. உன்னைக் கண்டதும் உன்மீது அளவற்ற அன்பு கொண்டேன்;

(11-ம் பக்கம் பார்க்க)


தையல் வேலைக்கு இன்பம் தருவன

'டொலர்' மெஷின்கள்



DOLLAR

அழகு, வேலைத் திறன், உழைப்புக்கு இணையற்றன. முன்பின் தையல், விசித்திர பூ வேலை செய்யவல்லன. உப-உறுப்புக்கள் எங்களிடமும், ஏஜண்டுகளிடமும் எப்போதும் உண்டு. ஏனைய பிரசித்த மெஷின் உறுப்புகளும் உதவும்.

விலை சகாயம்:

| | |
|---|---|
| மடக்கும் 5 லாச்சி கால் மெஷின் | ரூ. 350-00 |
| கை மெஷின் | ரூ. 195-00 |
| டெயிலர் மெஷின், பலத்த, விரைவு தையல் | ரூ. 475-00 |

இன்னும் பல இன மெஷின்கள் பல விலைகளிலும் உண்டு.

மாகாண ஏஜண்டுகள்:

பதுளை: R. வைத்திலிங்கம் லிமிட்டெட், 38, பசார் வீதி
கண்டி: வில்லியம் பேனிசிங்ஹவுஸ், 38, கொழும்புவீதி
கம்பளை: A M. P சைமன் சில்வா & Co., பெரிய தெரு
தெரனியகலை: S. பாலரத்தினம், பெரியதெரு
இங்கிரியா: K. D. குணேரிஸ் அப்புகாமி, பெரியதெரு
ஹொரணை: K. D குணேரிஸ் அப்புகாமி, பெரியதெரு
மஹரகமை: A. A. விஜயரத்தின, பெரியதெரு
பொலநறுவை: லேக் வியூ ஸ்டோர்ஸ், பெரியதெரு
லத்பந்துற: G கோவிஸ் & பிரதர்ஸ்
மத்துகமை: சென்ட்ரல் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்
பாணந்துறை: D S திசாநாயக, 6ம் குறுக்குத் தெரு
கம்பஹா: K. N. C. ஜினசேன, 18, பெரியதெரு
எஹலியகொடை: கானட் ஸ்டோர்ஸ்
சண்டலங்காவை: சண்டலங்காவை ஐக்கிய சங்க கடை
டிவுலபிட்டிய: C E D ஜயசிங்க
எட்டியாந்தோட்டை: சிவகுருநாதன் & சன்ஸ்
றக்வானை: அகமது பிரதர்ஸ், பெரியதெரு
கங்வெல்லை: P. C. மரைக்கார் & சன்ஸ், பெரியதெரு

ஏக விநியோகஸ்தர்கள்:-

டொலர் கோர்ப்பரேஷன்,

71, குமார வீதி, புறக்கோட்டை, கொழும்பு.
போன்: 6910.



சி. வி. பாட்



ஷெல் மார்க் சுத்தமான அலுமினியப் பாத்திரங்கள் எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். பித்தளைப் பாத்திரங்கள், பட்டுக் குடைகளும் பெற்றுக் கொள்ளும் இடம்:

C. V. BHATT

218 — 220, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம்: கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சொந்த நாடு இருக்கும் இலட்சணத்தில் இந்த நாட்டுக்கு வேறு உபதேசமா?

## பண்டாரநாயகாவால் மலேயாவுக்கு உதவமுடியாது"

# இரட்டைக் குழந்தைகள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லற வாழ்க்கையையே மறந்திருந்த என்னை மீண்டும் இல்லறத்தில் ஈடுபடச் செய்தவள் நீ. எனக்கு நீ நல்வாழ்வு அளிப்பாய் என்ற நம்பிக்கையில் உன்னைக் கைப்பிடித்தேன். உன்மேல் அறியாமல் வைத்த அளவு கடந்த அன்பினுற்தான் இன்று இந்த முதல் இரவில் இதை உன்னிடம் கூறினேன்.''

''அது சரி உங்கள் மனைவி எங்கே?''

''எல்லாம் விபரமாகக் கூறுகிறேன் கேள் லதா''. மாலதி என் காதலி. கலியாணமாகாத ஒரு குறையே தவிர மற்றப்படி நாங்கள் பன்முறை சந்தித்தோம். இன்பங் கண்டோம் அதன் சின்னமாக அவள் வயிற்றில் கரு வளர்ந்து எங்களை வெளியுலகிற்குக் காட்டிக்கொடுத்தது. அவள் கருவுற்றவுடன் அவளைக் கைவிட்டுவிடும்படி என் பெற்றோர் முதலாகப் பலர் புத்தி கூறினுர்கள். ஆனுல் என்னை நம்பிய ஒரு பெண்ணைக் கைவிட என் மனந் துணியவில்லை. பண்பு கெட்ட பாழும் சமூகத்திற்குப் பயந்து அவளைக் கூட்டிக்கொண்டு பாரத நாடு சென்றேன். அங்கே அவள் மணியை ஈன்றெடுத்து என் கையில் ஒப்புவித்து விட்டு நிம்மதியாகக் கண்மூடினுள். அவள் மறைந்த இந்த மூன்ருண்டில் மாருத என் மனதை மாற்றிவிட்டவள் நீ. பாலைவனமாகிய என் வாழ்க்கைப் பூங்காவை மீண்டும் பசும் புற்றரையாக்குவாய் என்ற ஒரே நம்பிக்கையில் உன்னை மணந்தேன். என்னை மன்னிப்பாயா லதா?''

''மன்னிப்பு! மன்னிக்காவிட்டால் இனி என் வாழ்வு? இதை நன்குணர்ந்துதானே என்னை இப்படி ஏமாற்றத் துணிந்தீர்கள். இப்பொழுது மன்னிப்புக் கோருகிறீர்கள்! மன்னிக்காமல் நான் வாழ முடியுமா? தாலி கட்டிய அரை மணி நேரத்தில் ஆசைக்கு மகனும் பிறந்து விட்டான்!'' பொத்துக்கொண்டுவந்த ஆத்திரத்தைக் கக்கிவிட்டு ஒரு பெருமூச்சுவிட்டாள்.

''லதா! நான் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை இப்போதுதான் உணர்கிறேன். என்னை என்ன செய்யச் சொல்கிருய்? மன்னித்துவிடு லதா, மன்னித்துவிடு......'' அவன் குரல் கம்மியது. அவன் கரங்களின்மேல் விளையாடிக் கொண்டிருந்த அவள் கரத்தின் மேல் இரண்டு சூடான நீர்த் துளிகள்! மின்சாரத்தாற் தாக்குண்டதுபோன்ற ஓர் உணர்ச்சி ஒருகணம்.

மறுகணம் தன் மெல்லிய கரங்களால் அவனை அன்புடன் அணைத்து அவன் கண்களில் இருந்து வடிந்த நீரைத் துடைத்தாள் அவள்.

''சுகுமார்! நீங்கள் கலங்க வேண்டாம். ஏதோ உணர்ச்சி வசப்பட்டு உளறிவிட்டேன். குழந்தை மணி என் நீர்களே அவன் எங்கே இருக்கிருன்? அவன் இன்றிரவே இங்கு வந்து சேர வேண்டும்.''

''லதா என் கனவு பலித்துவிட்டது. நீயே நான் தேடிய இலட்சிய மனைவி. நேற்று வரை என் குழந்தை என் கூடவே இருந்தான். இன்று காலைதான் அவனை என் சிநேகிதன் வீட்டில் விட்டு வந்தேன். விடிந்ததும் இருவருமாகச் சென்று அவனை அழைத்து வரலாம்'' என்று கூறி அவள் கன்னத்திற்செல்லமாகத் தட்டினுன்.

அதன் பின்பு எத்தனையோ ஆண்டுகள் இன்பமாகக் கழிந்தன. லதா மணம் புரிந்த அடுத்த ஆண்டில் ஓர் அழகிய ஆண்மகவை ஈன்றெடுத்தாள். அவன்தான் ரகு. அதைத் தொடர்ந்து இன்றுடன் பத்தொன்பது ஆண்டுகள் கழிந்து விட்டன. ரகுவிற்கு வயது ஏழாக இருக்கும்போது மணியை லதாவின் கையில் ஒப்படைத்து, ''எக்காரணங் கொண்டும் மணியிடம் வேற்றுமை காட்டி நடவாதே லதா. அவனும் ரகுவும் உன் இரட்டைக் குழந்தைகள் என்று நினைத்துக் கொள்'' என்று கூறிக் கண் மூடினுன் சுகுமார்.

★

இத்தனை ஆண்டுகளாகத் தோன்ருத சந்தேகம் இன்று ரகுவின் மனதில் எழக் காரணம்? அவளுடைய சிந்தனைக் குதிரை தடைப்பட்டது. பதற்றத்துடன் அவள் ரகு கைகளைப் பற்றி ''ரகு அவன் என் வயிற்றில் பிறக்கவில்லை என்ற ஒரே குறை தவிர மற்றப்படி அவன் என மகன் தான்'' என்று தன் வரலாற்றைக் கூறிய லதா ''ரகு உன்னளவில் மட்டும் இவ் விஷயம் இரகசியமாக இருக்கட்டும். எக்காரணங்கொண்டும் இதை மணி அறியக் கூடாது'' என்று கேட்டுக் கொண்டாள். ரகுவின் சந்தேகம் தோன்றக் காரணம் என்ன என்பதை அறிய அவளுக்கு ஆவலாக இருந்தது.

ரகு சொன்னுன்: ''அம்மா பணம் படைத்தவர்கள் பலர் அண்ணுவுக்குப் பெண் கொடுக்க மறுத்தும் என்னை ஏற்றுக்கொள்வதில் அதிகம் ஆர்வம் காட்டுவதால் இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும்என்று யூகித்தேன். ஆமாம்! ஏனம்மா அண்ணுவிற்குப் பெண்கொடுக்க இவர்கள் முன்வரவில்லை?''

''ரகு உன் தந்தை இறக்கும்போது என்மேல் வைத்த நம்பிக்கையால் தன் பெயருக்கிருந்த ஆஸ்தி அவ்வளவையும் உன் பெயருக்கே எழுதிவிட்டுக் காலமானுர். இந்த விசயம் தெரிந்தவர்களும் ஆஸ்திக்கு ஆசைப்பட்டவர்களும் அண்ணுவிற்குப் பெண்கொடுக்க முன்வரவில்லை. உன்னிடம் உள்ள ஆஸ்தியில் அண்ணுவிற்கு அரைப் பங்கைக் கொடு என்று கேட்கலாம் என்ருல் எங்கே நீ அவன் உன் உடன் பிறந்த அண்ணு இல்லை என்பதை அறிந்துவிடுவாயோ என்றுமறைத்து வைத்தேன். ஆனுல் இன்று நீயே எல்லாம் தெரிந்து கொண்டாய் அண்ணுவிற்கு அரைப்பங்கு கொடுப்பாயா ரகு?''

''இதென்னம்மா கேள்வி? என் ஆசை அண்ணுவின் வாழ்விற்கு உதவாத பணம் எனக்கு எதற்கு? என் ஆஸ்தி முழுவதையும் அண்ணுவிறகே எழுதிவிடுகிறேன்!''

''வேண்டாம் தம்பி! உன்னைப்போன்ற ஓர் அருமைத் தம்பி கிடைப்பதற்கு நான் எவ்வளவு பாக்கியஞ் செய்திருக்க வேண்டும்? ஒருவயிற்றில் பிறக்காவிட்டாலும்... .........'' அப்போது அங்கு வந்து சேர்ந்த மணி வார்த்தைகளை முடிக்கவில்லை லதா ஓரடி முன்வைத்து அவன்வாயைப் பொத்தி ''மணி இதென்ன பேச்சு'' என்ருள். அவனது தேகம் படபட என நடுங்கியது.

''அம்மா இன்று சாயந்திரந்தான் என் வாழ்க்கை வரலாறு முழுவதும் அறிந்தேன். உன்னைப்போல் ஒரு சிற்றன்னையைப் பெறுவதற்கு நான் முற்பிறப்பில் ஏதோ தவஞ் செய்திருக்க வேண்டும்! ஏனம்மா உன் கண்ணில் நீர்? நான் அறிந்து விட்டேன் என்ரு! அம்மா அடுத்த தெருவில் இருக்கும் முதலியார் மகள் விமலாவை நான் காதலித்தேன். அவள் தந்தையும் எங்கள் காதலை அநுமதித்தார். இன்று சாயந்திரம் அங்கு ஒரு தேனீர் விருந்திற்குச் சென்றிருந்தேன். அப்போது விமலா என்னைத் தன் தந்தைக்கு அறிமுகஞ் செய்து வைத்தாள். அவர் என்னை ஒருமுறை நன்ருக உற்றுப் பார்த்துவிட்டு 'அடபாதகா! உன்னையா விமலா காதலித்தாள். நான் லதாவின் மகன் ரகு என்றல்லா பேசாமல் இருந்தேன்.' என்ருர்.

எனக்குத் தலைசுற்றியது. 'என்னை யார் என்று நினைத்துவிட்டீர்கள்?' என்று கோபத்துடன் அவரைப் பார்த்துக் கேட்டேன் அப்போது அவர் என் வாழ்க்கை வரலாறு முழுவதையுஞ் சொல்லக் கேட்டு சந்தேகந் தெளிவதற்காக இங்கு வந்தேன். வாயிலில் உங்கள் இருவர் சம்பாஷணையும் என்னைத் தடுத்து நிறுத்தியது. என் சந்தேகமும் தெளிந்துவிட்டது.''

''அண்ணு!'' ரகு மணியைக் கட்டியணைத்தவாறே, ''விமலாவிற்கும் உனக்கும் நாளையே திருமணம் சிறப்பாக நடக்கும்'' என்று பேருவகையுடன் கூறினுன்.

''வேண்டாம் ரகு! உன் ஆஸ்தி எனக்கு வேண்டாம்! நீ வாழவேண்டும்'' ''அண்ணு! பார்த்தாயா? இப்போது நீதானே வித்தியாசங் காட்டுகிருய். நீவேறு நான் வேரு? அண்ணு வாழ்ந்தாலென்ன தம்பி வாழ்ந்தாலென்ன? இரண்டும் உனக்குச்சம்மதந்தானேயம்மா?'' என்று லதாவைப் பார்த்துக் கேட்டான் ரகு.

லதாவால் பதில் சொல்ல முடியவில்லை. இன்பத்தின் எல்லைக் கோட்டில் சொல்லுக்கு எங்கே இடமிருக்கப்போகிறது? கட்டியணைத்துக்கொண்டாள் இருவரையும்.

---

### இ. தி. மு. க. புளுமென்டால் கிளை

இ. தி. மு. க. புளுமென்டால் கிளை கழகத் தேர்தல் கூட்டம் அணிமையில் கழகப்பணி மனையில்நடைபெற்றது. கீழ்க்கண்டவர்கள் நிர்வாகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளர்: திரு. டி. கே. பாண்டியன், துணைச்செயலாளர்: திரு. எஸ். கந்தசாமி, பொருளாளர்: திரு. கு. இராமசாமி, பொதுக்குழு உறுப்பினராக திரு பத்மநாதனும் செயற்குழு உறுப்பினர்களாக எட்டுப் பேர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

### இ. தி. மு. க. செயற்குழு கூட்டம்

இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழக நாவலப்பிட்டிக் கிளையின் செயற் குழு கூட்டம் அணிமையில் கழகப் பணிமனையில் செயலாளர் இரா. சந்திரன் தலைமையில் நடைபெற்றது. திரு. லெ. சுமணன், திரு. மு. ரட்னம், திரு. சுமதி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். இறுதியில் திரு. இரா. தமிழ்மன்பன் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## இலங்கைப் பிரதமருக்கு சிங்கப்பூர் பத்திரிகை சூடு

பிரதமர் பண்டாரநாயகாவுக்கு "சிங்கப்பூர் ஸ்டான்டர்ட்" என்ற பத்திரிகை சரியான சூடு கொடுத்திருக்கிறது. மலேயா கடந்த ஆகஸ்ட் 31ல் சுதந்திரமடைந்ததல்லவா! அதையொட்டி நடந்த வைபவத்தில் விருந்தினராகக் கலந்துகொள்ள அயல் நாடுகளிலிருந்து சென்ற ஒரே ஒரு பிரதமர் இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாதான். அவர் சொந்த நாட்டிலே சிக்கல் இருக்க மலேயாவுக்குப் புத்தி சொல்லப் புறப்பட்டதன் விளைவாகவே சிங்கப்பூர் ஸ்டான்டர்டின் கண்டனத்துக்கு ஆளானுர்.

சிங்கப்பூர் ஸ்டான்டர்ட் கூறுவதாவது:-

''இலங்கைப்பிரதமர் திரு சொலமன் பண்டாரநாயகா



திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா

தனது சொந்த நாட்டின் குறைகளை நிவர்த்தி செய்த பின்னரே மலாயாவுக்கு உதவியளிக்க முன்வர வேண்டும். இலங்கையில், குறிப்பாக சிறுபான்மைச் சமூகத்தினர் மீது பாகுபாடு பாராட்டுவதை நிறுத்தி அவர்களிடையே நிலவும் அதிருப்தியை போக்குவதுதான் அவர் செய்யக் கூடிய சிறந்த சேவையாகும்.''

அது தொடர்ந்து கூறியதாவது:-

''இலங்கையில் அரசியல் நெருக்கடியும் வகுப்பு வேற்றுமைகளும்தோன்றுவதற்கு திரு. பண்டாரநாயகாவின் சாதி, சமயப்பாகுபாட்டு கொள்கைதான் காரணமாக இருந்திருக்கிறது. ஆளும் கட்சியிடம் ஒத்துழைப்பு மனப்பான்மையையும் சமய சகிப்புத்தன்மையையும் நல்லெண்ணத்தையும் காண்பது அரிதாயிருக்கிறது. திரு. பண்டாரநாயகா பதவிக்கு வந்தநாள் தொடுத்து அந்த நாட்டில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்புக்கு இதுவே காரணம்.

''திரு. பண்டாரநாயகா அளிக்கக்கூடிய உதவியை சுதந்திர மலாயா சந்தோஷத்துடன் வரவேற்குமென்பதில் சந்தேகமில்லை. என்ருலும் அவரால் இந்த நாட்டுக்கு அதிகமாக ஒன்றும் செய்துவிட முடியாது''

இவ்வாறு அப்பத்திரிகை கூறிமுடித்தது.

திரு. பண்டாரநாயகா மலேயாவில் கீழ்க்கண்டவாறு பேசியிருக்கிருர்:-

(13-ம் பக்கம் பார்க்க)

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து. அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனுமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின்..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

### கபட நாடகம்

இப்படி அவர் செய்யக் காரணம் என்ன? அதுதான் முக்கியமானது. அந்த சமயம் திரு. டி. எஸ். சேனநாயகா கொம்யூனிஸ்ட் கட்சியோடு பொருதிக் கொண்டிருந்த காலம். கொம்யூனிஸ்ட் கட்சியைத் தமது "விரோதி நம்பர் ஒன்" என்று பிரகடனம் செய்திருந்த காலம். அதேகாலத்தில் தான் திருவாளர் பொன்னம்பலம் இரகசியமாக, அதாவது தமது சகாக்களான திருவாளர்கள் செல்வநாயகம், வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் ஆகியோருக்குத் தெரியாமல் அந்தரங்கமாக, பெரிய சேனநாயகாவுடன் அரசாங்கத்தில் சேரக் குசுகுசுப் பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டிருந்தார். எனவே, தாமும் கொம்யூனிஸ விரோதி என்று காட்டி, கொம்யூனிஸ்ட்டுகளைத் தாக்குவதன் மூலம் சேனநாயகாவுக்கு ஆதரவு காட்டி, அவர் பிரீதியையும், நல்லெண்ணத்தையும் சம்பாதித்துக் கொண்டால் மந்திரிப் பதவிக்குப் பேரம் பேச அதுவும் பயன்படும் என்று கருதி இந்தக் கபட நாடகத்தை ஆடி முடித்தார்!

### மட்டக்களப்பு வாசகரின் சந்தேகம்

நமது மட்டக்களப்பு வாசக நேயருக்கு இந்த விஷயமெல்லாம் தெரியாததனால் போலும் நமது முல்லைத்தீவுச் செய்திபற்றி சந்தேகம் கிளம்பியிருக்கிறது.

இப்படியான சந்தேகக் கடிதம் யாழ்ப்பாணத்திலிருந்துவரவில்லை. காரணம் முல்லைத்தீவு யாழ்ப்பாணத்துக்கு அணிமையில் இருக்கிறது. எனவே முல்லைத்தீவிலிருந்து திரு. பொன்னம்பலம் ஓட்டம் பிடித்த செய்தி காதோடு காதாக யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்து, அங்கு மூலை முடுக்குகளிலெல்லாம் பரவிவிட்டது. அதனால் யாரும் சுதந்திரன் செய்திமீது சந்தேகப்பட்டுக் கடிதம் எழுதிக் கேட்கவில்லை.

மட்டக்களப்பு சற்றுத் தொலைவில் இருப்பதால் முல்லைத்தீவு செய்தி அங்கு எட்டவில்லை. எனவே நமது பொல்லாத வாசகர்களில் ஒருவர் எழுதிக் கேட்டுவிட்டார்! உண்மையை அறிவதில் இந்த வாசகருக்குள்ள ஊக்கத்தை மனமாரப் பாராட்டுகிறோம்.

### பேசாத பேச்சு

முல்லைத்தீவில் திருவாளர் பொன்னம்பலம் நிகழ்த்தியதாக தினகரனிலும் வீரகேசரியிலும் வெளிவந்த நீண்ட நெடிய பேச்சைப் படிப்பவர்கள், இரண்டையும் ஒப்பிட்டுப் படித்தார்களேயானால், அவை இரண்டும் ஒருவரால் ஏககாலத்தில் எழுதப்பட்ட பேச்சுக்கள் என்பதற்கு ஒற்றுமை காண்பார்கள். முல்லைத்தீவில் வீரகேசரிக்கும் தினகரனுக்கும் நிருபர்கள் இருந்தாலும் அவர்கள் ஒருவராய் இருக்கமுடியாது. எனவே இந்த இரண்டு பத்திரிகைகளிலும் வெளிவந்தது திருவாளர் பொன்னம்பலத்தினலோ அன்றி அவரைச் சார்ந்தவர் ஒருவராலோ தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட பேசாத பேச்சாகும் என்பது தெளிவு. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் இந்த முல்லைத்தீவு முழக்கம் கொழும்பில் வெளியான எந்த ஒரு ஆங்கிலப் பத்திரிகையிலும் வெளிவரவில்லை என்பதாகும்.

ஃ ஃ

இதோ இன்னொரு புதிய செய்தியை வெளியிடுகிறோம். இச்செய்தியை யாழ்ப்பாணத்திலுள்ள சுதந்திரன் ஒற்று நிருபர் நமக்கு அனுப்பியிருக்கிறார். இது உண்மையா பொய்யா என்பதை இனுவிலில் உள்ள சுதந்திரன் வாசக நேயர்கள் விசாரித்து ஊர்ஜிதம் செய்துகொள்ளட்டும்:

### கூட்டம் நடத்த ஆளும் இடமும் தேடும் படலம்

காங்கேசன்துறைத் தொகுதியில் உள்ள இனுவில் என்ற கிராமத்தில் ஓர் பகிரங்கக்கூட்டம் நடத்தி முடிப்பதற்காக திருவாளர் பொன்னம்பலம் கடந்த சில வாரங்களாகப் படாதபாடு பட்டுவருகிறார். திருநாவுக்கரசு, சண்முகநாதன், கதிர்காமநாதன், அம்பிகைபாகன் ஆகியோரையும், சில கடைக்காரரையும் சந்தித்து கூட்டம் நடத்த ஓர் இடம் வசதிசெய்து தரும்படியும், தலைமை வகிக்க ஒரு ஆள் பிடித்துத் தரும்படியும் வேண்டிக்கொண்டார். சிலர் மறுத்துவிட்டதாகத் தெரிகிறது. சிலர் சாக்குப்போக்குச் சொல்லிக் கடத்திவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

### அம்பிகைபாகன் அகப்பட்டார்

ஆசிரியர் திரு. சி. அம்பிகைபாகன் தாம் புதிதாக அமைத்த 'சிறீவாசம்' என்ற மனையில் 29-8-57ல், குடிபுகுந்தார். அந்த வைபவத்தில் தாமும் பங்குபற்றி அங்கு வருபவரிடம் தமது கொள்கைகளை விளக்கிக் கூற விரும்புவதாக திரு. ஜீ. ஜீ. அம்பிகைபாகனைக் கேட்டுக்கொண்டாராம். திரு அம்பிகைபாகன் அறவே மறுத்துவிட்டார். விரும்பினால் 5ம் நாள் திங்கட்கிழமை வந்து பங்குபற்றிக்கொள்ளலாம் என்றார். அதன்படி திங்கட்கிழமை மாலை 6-00 மணிக்கு வருவதாக முன்னறிவித்தல் கொடுத்தார் திரு ஜீ. ஜீ.

திரு அம்பிகைபாகன் கார் அனுப்பி ஆள் சேர்த்தார். ஆயினும் 13 பேர்கள்தான் வந்து சேர்ந்தார்கள். திரு ஜீ. ஜீ.—ஸீ என். 9457 நம்பர் காரில் வந்து சேர்ந்தார். திரு சி. கனகசுந்தரம் ஆசிரியர் மாலைபோட்டு வரவேற்றார். திரு அம்பிகைபாகனுக்கு புதுமனைப் பரிசாக திரு ஜீ. ஜீ. ஏதோ வெகுமதியும் கொடுத்தார்.

### 'சிறீவாசம்' பின்புறத்தில்

உடனே எல்லோரும் பின்புறமாக சமையலறைப் பக்கம் சென்றார்கள். வீட்டின் நான்குபுறமும் நாலு பேர் காவல் போடப்பட்டது. வீட்டுக்கு நுழையும் பிரதான வாசலிலும், காருக்குமாக கார் சாரதியைவிட மேலும் இரண்டு பேர் காவல் போடப்பட்டது. மிகுதி ஏழு பேருடன் திரு அம்பிகைபாகன் மனைவி, பிள்ளைகள் ஆக 11 பேர் மத்தியில் திரு ஜீ. ஜீ. சொற்பொழிவை ஆரம்பித்தார்.

### 11 பேர் மத்தியில் ஜீ. ஜீ. பேச்சு

அவர் பேசியதன் சாரம் பின்வருமாறு: "ஒப்பந்தம் தமிழரைப் படுகுழியில்

(13-ம் பக்கம் பார்க்க)

# தென்னாட்டுக்கு....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தீரர் வருவார், கப்பலோட்டிய தமிழனின் திரு உருவம் திரையில் காட்டப்படும், கரம் குவிப்போம் எனக் காத்திருந்தான். ஆனால் அருமைச் சிதம்பரனார் படம் அதில் இல்லை; தமிழர் சிந்தையில் உள்ள சிதம்பரனாரை சுதந்திர யாத்திரையில் சேர்க்கவில்லை என்பதைக் கண்டதும் கரங் குவிக்க எடுத்த கைகளால் கண்ணைத் துடைத்துக் கொண்டான்.

'ஏன் இந்த வேற்றுமை? ஏன் இந்தத் தவறுதல்? எண்ணும் போதே லோகமான்ய பால கங்காதர திலகர் வந்தார்; பிரோஸிஷா மேத்தா வந்தார்; தாதாபாய் நவரோஜீ வந்தார். அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினன்... ஆனல் சிவாவும் பாரதியும் அங்கு வரவில்லை.

### பாரதி இல்லை

இன்றைய சகாப்தத்தின் மாபெரும் கவிஞன், தேசியப் போருக்காக அஞ்ஞாதவாசம் செய்து அறநெறி வளர்த்த அமர கவிஞன், 'அச்சமில்லை அச்சமில்லை' என்று யாருடைய பாடலைப் பாடிப் பாடி நாம் சுதந்திரப்போர் புரிந்தோமோ, 'விடுதலை விடுதலை' என்று எந்தக் கவியினுடைய வாக்கை முழங்கி விடுதலை பெற்றோமோ? அந்த மகாகவி பாரதிக்கு அந்தப் படத்தில் இடமில்லை என்பது தமிழ் நாட்டுக்கு அவமானம். தென்னகத்திற்கு அநீதி. பாரதத்துக்கே ஒரு இழுக்கு என்று மனம் குமுறியது.

'சரி வேண்டியவர்களை இரண்டாம் பந்தியில் வைப்பதுபோல் பிற்பகுதியிலாவது நம் தலைவர்கள் வரலாம்' என்று காத்திருந்தான்.

### மாபெரும் தலைவர்கள் வந்தார்கள்

அடுத்த பகுதியும் வந்தது. மாபெரும் தலைவர்கள் படமெல்லாம் வந்தன. அண்ணல் காந்தி வந்தார். "மனிதகுல மாணிக்கம் நேருவைக் கண்டோம். மன்னர்களை ஜயித்த வல்லபாயைப்பார்த்தோம். அறிஞர்கள் போற்றும் ஆசாதைக் கண்டோம். ஜனதிபதி ராஜேந்திர பிரசாதைப் பார்த்தோம். ஜெய்ஹிந்த் முழக்கிய நேதாஜியையும், கண்டு மெய்சிலிர்த்தோம். ஆனல்...... ஆனல்......எழுத வேகை நடுங்குகின்றது. எண்ணினல் இரத்தம் கொதிக்கின்றது.

### ராஜாஜி இல்லை

ஒத்துழையாமை இயக்கத்தை உருவாக்கிய உத்தமரை, உப்பு சத்தியாக்கிரகத்துக்கு நம் தமிழ் நாட்டில் தலைமை தாங்கி நடத்திய சத்திய சீலரை, காங்கிரசின் அறிவுக் கருவூலத்தை, காந்திஜியின் வலக்கரத்தை, வெள்ளையன் வழி வழியாக வகித்து வந்த கவர்னர் ஜெனரல் பதவியை சுதந்திர இந்தியாவில் ஏற்றுக்கொண்ட முதல் கவர்னர் ஜெனரலை, உலகம் போற்றும் நமது அருமை ராஜாஜியை அந்தப் படத்தில் காணேம்!

### சத்தியமூர்த்தி இல்லை

பாராளுமன்றத்திலும் சரி, பட்டி தொட்டிகளிலும் சரி சுதந்திரப் போரின் சங்க நாதத்தை நாடெங்கும் முழக்கிய தீரர் சத்தியமூர்த்தியை அதில்காணேம்.

### தென்னாட்டவர்யாரும் இல்லை

தம் சொத்து சுதந்திரம் எல்லாவற்றையும் தேசத்துக்காக இழந்து எண்பது வருஷம் நாட்டுக்குப் பாடுபட்டு உழைத்த ஆந்திரகேசரி பிரகாசம்காருவை அதில் காணேம். ஆம், அந்தப் படத்திலே தேசிய சுதந்திரத்துக்காகப் போராடிய தென்னிந்தியர்கள் யாரும் இல்லை.

### காரணம் என்ன?

தென்னாட்டவர்களின் சேவை மற்றவர்களை விடக் குறைந்துவிட்டதா? மதிக்கத்தக்க அளவு தென்னாடு தியாகம் செய்யவில்லையா? கொடிக்காக உயிர்விட்ட குமரன் தமிழனகப் பிறந்தது தவறா? அல்லது செய்திப்பட இலாகாவின் தலைவருக்குத்தான் தேசத்தின் சரித்திரம் தெரியாதா? இல்லையேல், இந்தப் படத்தை வெளியிட அனுமதித்த கமிட்டி மெம்பர்கள் அத்தனைபேரும் ஒருதலைப் பட்சமான மனப்பான்மை உடையவர்களா?

### பதில் சொல்ல வேண்டும்: படத்தை வாபஸ் பெற வேண்டும்

இது வேண்டுமென்றே செய்யப்பட்ட அவமானம் என்று விகடன் கருதவில்லை. காரணம் எதுவாக இருந்தாலும் தவறு தவறுதான். இந்த மாபெரும் தவறுக்கு அரசாங்கம் தென்னாட்டவருக்கு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். இந்த அநீதி துடைக்கப்படவேண்டும். படத்தை உடனே வாபஸ் பெறவேண்டும்.

### பிரதிநிதிகள் பழியைத் துடைக்க வேண்டும்

மானம் பெரிதாக மதிக்கும் தமிழ் நாட்டின் பிரதிநிதிகள் பலர் டில்லியில் இருக்கிறார்கள். தென்னிந்தியாவுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்தப்பெருந்தவறை நீக்க அவர்கள் முன் வருவார்கள், பழியைத்துடைப்பார்கள் என்று ஒவ்வொரு தென்னிந்தியனும் எதிர்பார்க்கிறன்.

# நாட்டைக் காக்கும் பணியில்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் பெற்றவுடனேயே வீரவுணர்ச்சி பெருக்கெடுத்தோடியது. "பளிச்" என்று மின்னும் வேலுடன் நின்றன் அந்தப் பால்வடியும் முகத்தினன்.

ஏதோ கனவுலகத்திலிருந்து மீண்டவன் போல் அவள் அவனைப் பார்த்தாள். நன்றாகப் பார்த்தாள். ஆசை திருமளவிற்குப் பார்த்தாள். மயிர்கள் ஒரே அலங்கோல நிலையில் இருந்தன. தலைக்கு எண்ணெய் தடவி, அவனுடைய மயிரை அழகாக முடித்துவிட்டாள்.

சிங்கக் குட்டி போன்று நின்றன் அவன். இப்போது அவளுக்குப் பெற்ற பாசம் அற்றுவிட்டது. பிறந்த நாட்டுப் பாசம் முற்றிவிட்டது. "நாட்டைக் காப்பது நமது கடமை" என்று எடுத்துச் சொன்னள் அவனுக்கு. "செருமுகம் நோக்கிச் செல்" என்று கட்டளையிட்டாள். "வீரப் போர் புரிந்து வெற்றியுடன் வா" என்று வாழ்த்தி வழியனுப்பினுள். ஏறுபோல் பீடுநடை போட்டுக்கொண்டு அவனும் புறப்பட்டான் போர்க்களத்தை நோக்கி. பெற்றவள் பெருமிதமடைந்தாள்.

இது என் சொந்தக் கற்பனையல்ல. புலவர் தந்த கற்பனையுமல்ல பழந்தமிழ் நாட்டில் நடைபெற்ற உண்மை நிகழ்ச்சி இது. ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்பாற் புலவர் போற்றிப் புகழ்ந்து பாடுகின்றார் ஒரு தமிழ்ப் பெண்ணின் வீரத்தை.

போரிலே தந்தை இறந்தார்; அன்புக் கணவன் இறந்துவிட்டான். மறுபடியும் போர்ப்பறை கேட்கத் தன் ஒரே மகனையும் போருக்கனுப்பி வைத்தாள் அந்த மறக்குல மங்கை நாட்டைக் காக்கும் நல்லதொரு பணியில் ஈடுபட்ட இம்மங்கையின் வரலாறு புறநானூற்றில் காணப்படுகின்றது.

கெடுக சிந்தை கடிதிவள்
துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
[illegible]
இவள் தன்னை
யானை எறிந்து களத்
தொழிந்தனனே
நெருநல் உற்ற செருவிற் கிவள்
கொழுநன்
பெரு நிரை விலங்கி யாண்டுப்
பட்டனனே
இன்றும், செருப்பறை கேட்டு
விருப்புற்று மயங்கி
வேல்கை கொடுத்து வெளிது
விரித்துடீஇ இப்
ஒரு மகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென
விடுமே"

(புறம் 279)

இப் பாடலைப் படித்து ரசிப்பதுடன் அமையாது, நாம் சிறிது சிந்திக்க வேண்டும். நாடு இப்போது நலிந்து கிடப்பதன் காரணம் நாம் மங்கையர்க்குக் கொடுக்க மறந்த மதிப்புத்தான். எம்மால் அடக்கப்பட்டு அடிமைகளாகவே மாறிவிட்டனர் அவர்கள். அவர்களால் வளர்க்கப்படும் குழந்தைகளும் சோதாக்களாக, சோம்பலுற்றவர்களாகத்தான் வளர்கின்றார்கள். ஆகவே நாம் பெண்ணைப் பெருமையுடன் போற்றுவோம் அவள் வீர உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுப்போம். நாட்டிற்கு நல்ல பல பணிகள் செய்ய அவளை ஊக்குவோம். என்றும் எமக்கு அவள் அடிமையாகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை நீக்குவோம். எதிர்கால உலகு இளஞ் சிங்கங்களைக் கொண்டு வாழ, நாம் பெண்ணைத்தான் எதிர்பார்க்கின்றோம்.


த நொதேன் லைப் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கொம்பனி, லிமிட்.

தபால் பெட்டி: 807. கொழும்பு.

உடன் தேவை

1. Working Director:-
இன்சூரன்ஸ் அனுபவமுள்ள ஓர் முஸ்லிம் துரை மகன் தேவை. செல்வாக்கும் தகுந்த வருமானமுடையவராகவுமிருக்க வேண்டும்.

2. Inspectresses:-
சமூக வாழ்க்கையிலும் கல்வியிலும் இன்சூரன்ஸ் செய்வதற்கு மனம் கொண்டவரும் தேவை.

A. C. நடராசா, பரிபாலன டிரெக்டர்.

க. சிற்றம்பலம், மனேஜிங் டிரெக்டர்.

THE NORTHERN LIFE AND GENERAL INSURANCE CO., LTD.
State Bank Building,
First Floor,
18 1/6, Prince Street, Colombo-1.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின்..

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

தள்ளிவிட்டது. ஒப்பந்தம் கைச்சாத்தாகிய தினத்திலிருந்து எனக்கு தூக்கமே வருவதில்லை. தமிழ் மக்கள் தப்பிக்கொள்ள மாற்று வழி ஒன்றுதான் இருக்கிறது. தமிழ் மக்கள் சமஷ்டிக் கட்சியை ஒதுக்கிவிட்டு ஒரு ஐக்கிய முன்னணி கூட்ட வேண்டும். அதில் என்னைப் போன்ற நேர்மையான தலைவர்கள் இடம் பெற வேண்டும். நான் அன்றுதொட்டு ஐக்கிய முன்னணி நிறுவப் பாடுபட்டு வருகிறேன். தலைமைப் பதவிக்காக சமஷ்டிக் கட்சியினர் கெடுத்துவிட்டார்கள். சுதந்திரனில் வெளிவருவதெல்லாம் சுத்தப் பொய் அதை விரட்டியடிக்க 'தமிழ் நாடு' பத்திரிகை செதியில் வெளிவரும். அதற்கான தளவாடங்கள் சேகரிக்கப்பட்டுவிட்டன. 7-9-57ல் இணுவிலில் ஒரு பகிரங்கக் கூட்டம் நடத்த நீங்கள் எல்லோரும் உதவி செய்ய வேண்டும்'' இவ்வளவோடு பேச்சை முடித்துக் கொண்டார். (இதை ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் திரு ஜீ ஜீ பேசினுர் என்று வேறு பத்திரிகையில் வெளியிடவுங்கூடும்)

### தப்பினது தம்பிரான் புண்ணியம்

கூட்டம் நடக்கையில் வேறு யாரும் உள்ளே போக அனுமதிக்கப்படவில்லை. கூட்டத்தை முடித்துக் கொண்டு வருவார் ஜீ. ஜீ. என்று எண்ணிக்கொண்டு சில வாலிபர்கள் இணுவில் தெற்கு மடத்து வாசல் பிள்ளையார் கோவில் முன் சந்தியில் கறுப்புக் கொடிகளுடனும், ''தமிழனைக் காட்டிக் கொடுத்த துரோகி ஜீ. ஜீ. ஒழிக!'' என்ற அட்டைகளுடனும் காத்து நின்றனர்.

இதை அறிந்தவர்கள்—கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள்—ஒருக்காலும் காரைக் கண்டிராத ஒரு கரடுமுரடான பாதையால், திரு ஜீ. ஜீயையும், காரையும் ஒளித்துச் சென்று, கே. கே. எஸ். ரோட்டில் ஏற்றிவிட்டார்கள். தப்பினது தம்பிரான் புண்ணியம் என்று திரு ஜீ. ஜீயின் கார் மின வேகத்தில் ஓடி மறைந்தது!

## 'சொந்த நாடு . . .

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

''சுதந்திரத்தின் தலைவாயிலில் நிற்கும்பொழுது மலேயா பல கடுமையான பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டியதேற்படத்தான் செய்யும். சுதந்திரம்பெற்ற ஒவ்வொரு நாட்டிலும் பாஷை, அரசியல், சமயம் போன்றவிஷயங்களில் அபிப்பிராய பேதங்கள் இருந்து வந்திருக்கின்றன.

பரஸ்பர நல்லெண்ணம் அன்பு, நேசஉறவு ஆகியவை மூலம் இவைகளைத் தீர்த்துக்கொள்ளமுடியும்'' இது தவிர, சியாட்டோ போன்ற இராணுவக் கோஷ்டிகள் இருப்பது துரதிர்ஷ்டமென்றும் மலேயா சியாட்டோவில் சேராதிருக்கவேண்டுமென்பதே தனது விருப்பம் என்றும் அவர் தெரிவித்தார்.

## செய்தித்தாள்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்ட பண்டைக்காலத்தில் அவர்கள் செய்திகளைப் பரப்பிய முறை ஒரு சான்றாகும். பண்டைத் தமிழகத்தில் சாரணர் என்ற பெயரினர் கூட்டங் கூட்டமாக நாடு நகரங்கள் சுற்றி, ஊர் தோறும் தங்கிச் செல்வர். ஒவ்வொரு ஊரிலிருந்தும் செய்திகளைத் திரட்டிக் கொண்டுவந்து தங்கும் ஊரிலுள்ளோருக்குச் சொல்வார்கள்; பிறகு அந்த ஊர்பற்றிய செய்திகளை அறிந்து கொண்டு வேறோர் ஊர் செல்வர். இவர்களை அரசரும், வள்ளல்களும் ஊர்ப் பொதுமக்களும் வரவேற்று அன்பு செலுத்துவார்கள்.

தோட்டி முதல், செல்வந்தர்வரை வேலைசெய்து அலுத்து, வீடுதிரும்பும் அனைவருக்கும், ஆறுதல் கூறுவது, களிப்பூட்டுவது, செய்தித்தாளே. இன்று அது எவ்வளவோ வளர்ந்துள்ளது.

—இ. சிவஞானம்

மாத்தளை

## பறக்கும் . . . .

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நூற்தொழிற்சாலையில், ''பறக்கும் குதிரை மார்க்'' நூல் வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பந்து நூல்கள், தையல் மெஷின் நூல்கள், பின்னல் நூல்கள் ஆதியன அங்கு தயாராகின்றன.

இத் தொழிற்சாலை ஆரம்பித்து சொற்ப காலமேயாயினும், அங்கு உற்பத்தியாகும் நூல் வகைகள் இறக்குமதியாகும் நூல்களை விட தரத்தில் எந்த வகையிலும் குறைந்தனவல்லவென்றும், விலையைப் பொறுத்த வரையில் மிகவும் சிக்கனமாயுள்ளன வென்றும் பாவிப்பாளர்கள் கூறுகிறார்கள்.

## கொழும்பில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்து ஆலயங்களின் அதிபராகவும் விளங்குகிறார்.

நவரத்தின வியாபாரத்திலும், தங்க வியாபாரத்திலும் ஈடுபாடுள்ள திரு. கனகசபைக்கு பம்பாய், சென்னை, மதுரை ஆகிய இந்திய நகரங்களிலும் கிளை ஸ்தாபனங்களுண்டு. நகை வியாபாரத்தினுல்செல்வந்தரான திரு. கனகசபை கலை, இசை ரஸிகராகவும், ஏழைகளுக்குதவும் பண்பினராகவும், அரசியல் வாதியாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

## வேதனையை. . .

(9ம் பக்கத் தொடர்ச்சி)

நன்மை இல்லை; நாட்டுக்கும் நன்மை இல்லை.

''எனவே இந்த நாட்டில் சிராக நடைபெற்றுவரும் பாடசாலைகளின் நிர்வாகத்தில் புரட்சிகரமான மாற்றங்களையும், நியமன வேறுபாடுகளையும் செய்யுமுன் கல்வி அமைச்சர் நன்கு சிந்தித்து. சம்பந்தப்பட்ட ஆசிரியர் ஸ்தாபனங்களையும், மக்கள் தம் அபிப்பிராயங்களையும் கலந்துகொள்வார் என்று எதிபார்க்கிறோம்.'' இவ்வாறு திரு செல்லத்துரை கூறி முடித்தார்.


கெயிட்டி (கொழும்பு)

செப்டம்பர் 7ம் திகதி சனிக்கிழமை முதல்

தினசரி மாலை 6, இரவு 9-30

பகற் காட்சி சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணி

ஞாயிறு காலைக் காட்சி 10 மணி

ஏ. நாகேஸ்வரராவ்-ஜமுனு

ஜி. வரலெட்சுமி- ஈ. வி. சரோஜா

(நடிக்கும்)

பக்காத் திருடன்

எதிர்பாருங்கள்! நரசு ஸ்டுடியோஸாரின்

இரு சகோதரிகள்

ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். நம்பியார், டி. எஸ். துரைராஜ்,
கிரிஜா வி. கே. ராமசாமி, டி. பி. முத்துலட்சுமி முதலியோர் நடித்தது.

டைரக்ஷன்:- வேதாந்தம் ராகவய்யா. எதிர்பாருங்கள்!!




வெற்றிகரமான 2வது மாதம்!

ஜெமினி கணேசன், டி. எஸ். பாலையா,
கே. ஏ. தங்கவேலு, எம். என். ராஜம்,
பேபி ராஜகுமாரி, டி. வி. குமுதினி நடிக்கும்

சிட்டாடல் பிலிம்ஸாரின்

"மல்லிகா"

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செண்ட்ரல் (மருதானை) ஓடியன் (கல்கிசை) போகம்பரை (கண்டி) ஜோதி (திருகோணமலை)

தினசரி மாலை 6, இரவு 9-30, சனி, ஞாயிறு பகற் காட்சி: பிற்பகல் 2 மணி,
ஞாயிறு காலைக் காட்சி: 10 மணி.

முருகன் (ஜிந்துப்பிட்டி)
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
காலஞ்சென்ற என்.எஸ்.கிருஷ்ணன் நடித்த
பணம்

ராணி (யாழ்ப்பாணம்) ஸ்டார் (பதுளை)

தினசரி மாலை 6-30, இரவு 9-30. பகற் காட்சி: சனி, ஞாயிறு பிற்பகல் 2-30.
ஞாயிறு காலைக் காட்சி: 10-30.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு நாய்கள்

ஒருவன் இரு நாய்களை வளர்த்து வந்தான். ஒரு நாயை வேட்டைக்கும், மற்ற நாயை வீட்டைப் பாது காக்கவும் பழக்கி வைத்தான். வேட்டையில் கிடைத்ததையே வீட்டு நாய்க்கும் கொடுத்து வந்தான். இதனால் அவனோடு வேட்டைக்குச் செல்லும் நாய் தனக்குக் குறைந்த பாகம் கிடைப்பதையிட்டு வருத்தம் அடைந்து, வீட்டு நாயைப் பார்த்து, ''நண்பா! நான் நாள் முழுதும் உழைத்தாலும் எனக்குக் குறைவான தீனியே கிடைக்கிறது. நீயோ வீட்டிலிருந்து கொண்டே மேலான பங்கைப் பெறுகிறாயே'' என எடுத்துரைத்தது. அதற்கு வீட்டு நாய் ''நண்பா! என்னைக் குறை கூறாதே. நமது எசமான் அத்தகைய வேலைக்கு என்னைப் பழக்கி வைத்திருக்கிறார். என்னிடம் குறை காண்பதை விட, எம்மைப் பழக்கம் செய்தவரிடமே குறை காண்பது நலம்'' என்றது.

பெரியோர் செய்த பிழைக்கு சிறியோரை குறை கூறுவது நலமன்று.

—அ. அ. மஹ்மூது, மாத்தளை.

---

# நன்மை

புவியில் மாந்தராய் பிறந்தோர் அனைவரும் தீமையை நீக்கி நன்மையைச் செய்தல் வேண்டும். நாம் நன்மையை மேற்கொண்டால் நாளும் நலம் பெறுவோம். தீமையை மேற்கொண்டால் நாளும் நலிவுறுவோம். இது உலக நியதி.

மேலும் பிறரொருவர் நம்மீது அபாண்டமாகப் பழியைச் சுமத்தலாம், அல்லது தப்பபிப்பிராயம் கொண்டிருக்கலாம். இதை நமது ஆத்திரத்தினால் நீக்க முடியாது, நீக்க முயல்வதும் தவறு. ஆதலாற் நாம், தீமை செய்தோருக்கும் நன்மையைச் செய்து பழி நீங்க—தப்பபிப்பிராயம் நீங்க பாடுபட வண்டும். இதைத்தான் வான் புகழ் வள்ளுவரும்,

''இன்னா செய்தாரை ஒறுத்
தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்''

என கூறிப் போந்தார். இதனின்று, நாம் நன்மையின் பயனை, சிறப்பை அறிந்து கொள்கின்றோம். ஆதலாற் நாம் அனைவரும், வள்ளுவர் சாற்றிய நன்மையின் வழி நின்று, வாழ்வில் வெற்றி பெறுவோமாக!

இரா—சந்திரி

இரத்தினபுரி




# பாரதியின் வாழ்க்கைப் பாதையிலே

வறுமையின் கோரப் பிடியில் அல்லலுறும் ஆயிரமாயிரம் மக்களை உடைய பாரதத்தின் ஒரு பகுதிதான் எட்டைய புரம் என்னும் சிற்றூர். இங்கேதான் எம் பாரதி பிறந்தார். தமிழ் நாட்டுத் தலை எழுத்துக்கு இவர் குடும்பம் மட்டும் விதிவிலக்கா என்ன? தன் குடும்பத்துடன் தானும் வறுமையில் வாடினார் பாரதி.

வறுமையில் வாடிய பாரதி ஐந்தாவது படிக்கும் போதே தன் ஆருயிர் அன்னையை இழந்தார். பின் தந்தையின் அரவணைப்பிலே தான் வாழ்ந்தார். தன் தந்தையின் அறிவு நூற்களைப் படிப்பதிலேயே அன்னையின் பிரிவை தேய் பிறைபோல் மறக்கத் தொடங்கினார். அத்தோடு ஒரு ஆங்கிலப் பள்ளியிலும் தந்தையால் சேர்க்கப்பட்டார் பாரதி.

துள்ளித் திரியும் பருவம்! பாரதியின் பள்ளிப் படிப்பு பாழாயின. இயற்கை அன்னை அவரை இரு கரமேந்தி அழைத்தாள். ஏரிகளிலும், வாவிக் கரைகளிலும், வண்ணச் சோலைகளிலும் வானம் பாடியென பறந்து திரிந்தார். இயற்கையின் எழில் கண்டுகளிகொண்டார். அதனால் அவர் உள்ளம் நிறைந்து இதயம் கீதமிசைத்தது. நாவசைந்தது! பின்தழுவிச் செல்லும் தென்றலில் அமுத கீதமாய் ஒலிக்கத் தொடங்கியது.

பாலன் பாரதி பாடத் தொடங்கினான். அப்போதெல்லாம் அவன் பாரதி ஆகிவிடவில்லை. வெறும் சுப்பிரமணியம் என்றே அழைக்கப்பட்டான். அவன் நாவில் அசைந்த ஒவ்வொரு சொல்லும் ஒவ்வோர் தேன் துளிகளாகவே சிந்தியது. அவன் பாட்டைச் சுவைத்த அவன் அன்பர்கள், சுப்பிரமணியனுக்கு ''பாரதி'' என்ற புகழான பட்டத்தையும் சூட்டினர். சுப்பிரமணியப் பாரதி என்ற புலவராகத் திகழ்ந்தார் அவர். பெரும் புலவர்களும், கவிஞர்களும் பாரதியுடன் போட்டியிட்டு மண்ணைக் கவ்வினர் இதனால் ''வரகவி சுப்பிரமணியப் பாரதி''யாக புகழ்மாலை சூட்டப்பெற்று பின் ''அமர கவி''யாகத் திகழ்ந்தார்.

புகழடைந்த பாரதி எட்டையபுரம் மன்னனின் சமஸ்த்தானத்திற்கு ஆஸ்தான கவியாக அமர்த்தப்பட்டார். இருந்தும் அடிமை வாழ்வை அவர் அறவே வெறுத்தார். பழைய நாட்களின் நினைவுகள் அவர் கண்முன் நிழலாடின. உடனே அப்பதவியைத் துறந்து, இந்தியா, சுதேசமித்திரன் பத்திரிகைகளுக்கு ஆசிரியராக அமர்ந்தார். ஆங்கிலம் ஹிந்தி சமஸ்க்கிருதம் போன்ற மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த பாரதிக்கு நல்லுரை பரப்பும் தூதனாக பத்திரிகையும் கிடைத்த போது அவர் திறமையைக் கேட்கவும் வேணுமா?

இந் நிலையில்தான் பாரதியின் நெஞ்சில் இன்னொன்றும் தோன்றியது. தன்னைப் போல் தன் தேசமும், தேச மக்களும் சுதந்திரமாய்வாழ வேண்டும் என்று எண்ணினார். நம்தேச மக்கள் எதற்கெடுத்தாலும் அஞ்சி வாழ்வதைக்கண்டு உள்ளம் குமுறினார். ''அஞ்சி அஞ்சிச் சாவார், இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே'' என்று புலம்பினர்.

மக்களின் உள்ளங்களைத் தட்டி எழுப்ப ''தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா!'' என்று அறை கூவினார்.

செந்தமிழ் நாடென்னும்
போதினிலே-இன்பத்
தேன்வந்துபாயுது காதினிலே
தந்தையர் நாடென்ற
பேச்சினிலே-ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

என்று மக்களின் உள்ளங்களில் தாய் நாட்டின் பாசத்தை ஏற்படுத்தினார். அன்னியரின் அரட்டலுக்கு அடங்க மாட்டாது ''அச்சமில்லை! அச்சமில்லை!! அச்சமென்பதில்லையே!! உச்சிமீது வான்இடிந்து வீழுகின்றபோதிலும்'' என்றுமக்களின் மனதில் அஞ்சாமை ஒளியைப் பரப்பினார். பாரதம் சுதந்திரமடையப் பெரு முயற்சிகள் செய்தார். பாரதம் சுதந்திரம் அடைந்து விட்டதாகக் கனவு கண்ட பாரதி

''ஆடுவோமே பள்ளுப்
பாடுவோமே ஆனந்த
சுதந்திரம் அடைந்துவிட்டோ
மென்று''

என்று களி கொண்டாடினார். ஆனால் அவர் கனவும் ஒரு பொழுதில் பலித்து விட்டது.

''ஓடி விளையாடு பாப்பா-நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா''

என்று குழந்தைகளுடன் கொஞ்சினார். ''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்'' என்று தாயினத்தின் தனிச் சிறப்பை உணர்த்தினார். ''ஏழை என்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்'' ''எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்'' என்று சாதி சமய வேறுபாடுகளை ஒழிக்கக் கூறினார். இன்னும் அவர் பாடாதவை இவ்வுலகில் இல்லை என்றே கூறலாம். எல்லோருக்கும் எல்லாவற்றிக்கும் பாடினார். அவர் பாடல்களை பாமரர் முதல் பண்டிதர்வரை படிக்கலாம். பாரதி வாழ்க!

—மது

கொழும்பு

# மான் குட்டி

நல்ல குட்டி மான் குட்டி
நாங்கள் விரும்பும் மான்குட்டி
கள்ளங் கபடம் அறியாது
சூத்திரம் சூது தெரியாது
பள்ளம் நோக்கும் வெள்ளம் போல்
அன்புள்ளோரை வந்தணைக்கும்
'வள்ளி' என்று கூப்பிட்டால்
துள்ளிக்கொண்டு ஓடிவரும்

மருண்ட கண்ணைக் கண்டாலே
மக்கள் மருண்டு போவாரே
கூழை வாலின் அழகு கண்டால்
குறைகள் மறந்து போவாரே
அன்பாய்க் கொடுக்கும் தளிர் இலையை
ஆசையோடு வாங்கித் தின்னும்
அருமையான எங்கள் மான் குட்டி
பருவமான மான் குட்டி

தி. சிறீஸ்கந்தராசா

தெல்லிப்பழை.

# செய்தித்தாள்

நமது அன்றாடத் தேவைகள் பலவற்றுள், தவறவிடக்கூடாதது பத்திரிகை படித்தல். எம்மைச் சுற்றி எத்தனையோ சிறப்பியல்புகள் நடைபெறுகின்றன. அவை அரசியலைப் பற்றியோ பொது வாழ்வைப் பற்றியோ விருக்கலாம் 'ஒன்றே குலம்' என்று மதித்து, 'யாமார்க்குங் குடியல்லோம்' என்று உணர்ந்து வாழ புதினத்தாள் அவசியம் உதவிபுரியும். இங்கு நடப்பது இந்தியாவில் எதிரொலிக்கிறது; அங்கு நடப்பது அமெரிக்காவில் எதிரொலிக்கிறது. இதற்கு ஆணிவேர் செய்தித்தாள். ஆதலின் அவற்றைக் கற்றல் அவசியமன்றோ.

'ஆறு போவதே போக்கு அரசன் சொல்வதே தீர்ப்பு' என்ற நிலையை மாற்றி 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்,' 'எனக்கு நானே ராஜா' என்னும் நிலையை உண்டுபண்ணியது பத்திரிகையேயாம். மக்கள் உள்ளத்திலே சுதந்திர உணர்ச்சியை, ஊட்டுவதும், போக்குவதும் பத்திரிகையே. அதன் ஆற்றல் வகையறுத்தற்பாற்றன்று.

செய்தித்தாள் மக்களின் பேராசிரியராகும். தன்னை அண்டும் எவர்க்கும் அது பாகுபாடின்றி நலம் நல்கும். அதில் வரும் செய்திகள் அன்றாட பாடமாகும். இப்பா [illegible] களிலிருந்தே உலகை வெல்வோரும் தோன்ற முடியும்.

பத்திரிகையில் வரும் செய்திகள் கருத்துப் போராட்டத்திற்கு சிறந்த கோட்டை கொத்தளமாகும். இதன் சிறப்பறிந்துதான்

''அறிஞர் தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழப் பெண்ணே
உன்
நலம் காணார் ஞாலம்
காணார்''

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்பாடியுள்ளார்.

இத்துணைச்சிறப்புவாய்ந்த பத்திரிகையின் தோற்றத்தைப் பொது அறிவில் நாட்டம் கொண்டோர் அறிய விரும்புவர். எனவே அதனை ஆராய்வம்.

கி. பி. 1566ம் ஆண்டு இத்தாலி தேசத்து வெனிஸ் நகரிலே முதற் பத்திரிகை வெளியாயிற்று. வெனிஸ் நகர அரசாங்கம் மக்களுக்கு அறிவிக்கவேண்டிய செய்திகளைத் தாள்களில் எழுதி பொதுவிடங்களில் ஒட்டி வைக்குமாம். ஒரு ''கெஜட்டா'' (இத்தாலியில் வழங்கிய ஒருவகை நாணயம்) செலுத்துவோரே அந்தச் செய்தித்தாளைப் படிக்க அனுமதித்துவந்தனர். இக்காரணம் பற்றிதான் செய்தித்தாள்களும் 'கெஜட்ஸ்' என்ற பெயர் வழங்கலாயிற்று.

அச்சடிக்கும் பொறி வந்ததும் எல்லோரும் சொந்தத்திலேயே வைத்துக் கொள்ள பத்திரிகை கிடைத்தது.

தமிழர் பழம் பெருமை வாய்ந்தவர். ஒரு காலத்தில் நாகரிகமுடன் வாழ்ந்தவர்கள் என்பதனை எடுத்துக்

(13-ம் பக்கம் பார்க்க)

# எனக்குத் தெரிந்தவை

1 ஐந்து சமுத்திரங்களிலும் ஆழமானது பசிபிக் சமுத்திரம். (35,410 அடி)

2. 'மடம் கூரி' என்ற பிரஞ்சுப் பெண்மணி றேடியத்தைக் கண்டு பிடித்தார்.

3. நாம் எழுத உபயோகிக்கும் பவுண்டன் பேனாவை முதன் முதல் கண்டறிந்தவர் ''வாட்டர்மன்'' என்ற அமெரிக்கர்.

4. நல்லூர் கந்தசாமி கோவில் ''செண்பகப்பெருமான்'' எனப்படுபவரால் கட்டப்பட்டதாம்.

5. உலகில் 7296 மொழிகள் உள்ளன.

மேரி திரேசா தம்பிராஜா
வ. ம. இல: 781

காவலூர்

---

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை ''வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து ''வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

## சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 8

பெயர்..................................................

பாடசாலை..................................................

விலாசம்..................................................

..................................................

.................................... ....................................

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்:

# தி.மு.க. வின் பேரில் இலங்கையில் நடைபெறும் தில்லு முல்லுகள்

—0—

## கழகம் ஒன்ரு? இரண்டா? என்ற கவலை வளர்கிறது

**"சுதந்திரன் ஆசிரியர் அவர்களுக்கு: கீழே தரப்படும் கடிதம் 3)8-57 வீரகேசரி தினப்பதிப்பில் வெளியிடப்பட்ட போதிலும், தங்கள் பத்திரிகை தான் தமிழ் நாட்டிலுள்ள தி.மு.க வட்டாரத்தில் பெரிதும் படிக்கப்படுவதால், சுதந்திரனிலும் இக்கடிதத்தை மறுபிரசுரம் செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிரேம். வீரகேசரியில் வெளியானதென்பதற்காக இதை ஒதுக்கிவிடமாட்டீர்கள் என்றும், தி.மு.க. மீது மக்களுக்குள்ள நல்லெண்ணம் பாதுகாக்கப்படுவதற்காக இக்கடிதத்தைத் தவருது வெளியிடுவீர்கள என்றும் எதிர்பார்க்கிரேம்."**

இலங்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல செல்வாக்கைப்பெற்று வருகின்ற சந்தர்ப்பத்தில் வெண்ணை திரண்டு வரும் பொழுது தாழி உடைந்த கதையைப் போல கடந்த ஆறு மாத காலமாக தலைவர்களுக்கிடையிலும் காரியதரிசிகளுக்கிடையிலும் பொருளாளர்களுக்கிடையிலும் ஒற்றுமை இல்லாது நல்ல முறையில செயல்பட்டுக் கொண்டிருந்த கழகங்களை செயல் அற்றுப் போகும்படி செய்துவிட்டனர். தி.மு.க. தலைவர்கள் பொதுமக்களிடத்தில் இருந்த செல்வாக்கையும் இளைஞர்களிடத்தில் இருந்த எழுச்சியையும் இ.மு.க. தமிழரசு கட்சியிடத்தில் இருந்த நன்நம்பிக்கையையும் இழந்து ஜனநாயகத்திற்கு முரணுகவும் கடமை கண்ணியம் கட்டுப்பாடு இவைகளை மீறியும் தனிக் கோஷ்டிகள் ஆரம்பிக்க முற்பட்டுவிட்டன.

இந்தக் கோஷ்டிகள் ஒவ்வொன்றும் தாங்களே இ.த.மு.க. தலைமை ஸ்தாபனம் என்று கூறிக்கொள்ளுகின்றன.

### நாங்கள் தான்! பொறுப்பாளர்

இ. தி. மு. க. தலைமை நிலையம் என்று கடிதத் தலைப்புகளையும் உறுப்பினர் ரசிதுகளையும் அச்சடித்து வைத்துக்கொண்டு சிறு கிராமங்களில் உள்ள ஒன்றும் அறியாத திராவிடமுன்னேற்றக் கழக கிளைகளுக்கு நாங்கள் தான் தற்பொழுது இ. தி. மு. க. பொறுப்பாளர் ஆகையால் எங்களிடம் எது வேண்டும் என்ருலும் உடனே அறிவித்தால் அனுப்பி வைப்போம் என்று சிறு துண்டுப் பிரசுரங்களை அச்சடித்து அனுப்பி அவர்களின் மனதைக் குழப்புகிருர்கள். கிழமைக்கு ஒரு செயற் குழுவைக் கூட்டி ஒவ்வொரு கோஷ்டியினரும் ஒவ்வொரு விதமான அறிக்கை விடுவதும் அதற்கு மற்றக் கோஷ்டியினர் மறுப்புக் கூறுவதும், இவ்விதமாக இருந்துகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்த கோஷ்டியினர்களில் யார் உண்மையான இ. தி. மு. க. என்று பொதுமக்கள் தீர்மானிக்க முடியாத நிலை ஏற்பட்டு இருக்கின்றது.

### இ. தி. மு. க. ஒன்ரு இரண்டா?

இதைப்பற்றிக்கூட நண்பர் யாழ்வாணன் வீரகேசரியில் சென்ற 13-8-57 நேயர் கடிதத்தில் இ. தி. மு. க. ஒன்ரு, இரண்டா என்ற தலைப்பில் ஒரு கடிதம் வரைந்து இருந்தார். அதன் பின்கூட இந்த கோஷ்டியினர் ஒன்று சேராததை முன்னிட்டு வருந்துவதுடன் இவர்கள் இவ்வாறு இருவரும் நடந்து கொள்வது இலங்கையில் மட்டுமின்றி தமிழ் நாட்டில் உள்ள தி. மு. க.வினர்களுக்கும் மற்றும் பம்பாய், பர்மா, சிங்கப்பூர் போன்ற ஏனைய நாடுகளில் உள்ளவர்களுக்கும் இழுக்கு ஏற்படுவதற்கு காரணமாக இருக்கின்றது.

### நாளுக்கு ஒரு செய்தி

சென்ற 17-8-57 தேதி சனிக்கிழமை வீரகேசரியில் இ. தி. மு. க. கூட்டம் கம்பளையில் நடந்தது என்றும் அவற்றில் இ. தி. மு. க. பொதுச் செயலாளர் திரு ஜே.கே கே.சுந்தரம் சொற்பொழிவு ஆற்றினுர் என்றும் எழுதப்பட்டிருந்தது. அதே பத்திரிகையில் நாலாம் பக்கத்தில் டயஸ் பிளேஸில் இ. தி. மு. க செயற்குழு கூட்டம்பொறுப்பாளர் திரு ஆர். ஆர். கே. டேலர் தலைமையில் நடந்தது என்றும் செய்தி போட்டிருக்கின்றது. இந்த விதமாகத்தான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக செய்தி கிடைக்கின்றது.

### நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும்

இந்த கோஷ்டியினர் எல்லாம் ஒன்று சேர்ந்து இ. தி. மு.க. விற்கு ஒரு பொதுச் செயலாளர்தான் என்று அறிக்கைவிடும் வரையில் இலங்கையில் உள்ள தமிழ் பத்திரிகை ஆசிரியர்களும் தமிழ் நாட்டில் உள்ள தமிழ் பத்திரிகை ஆசிரியர்களும் இ. தி. மு. க. செய்தியை பத்திரிகையில் போடாது இருக்கும்படி கேட்டுக் கொள்வதுடன் இவர்கள் கூடிய விரைவில் ஒரு முடிவுக்கு வராவிடில் இலங்கை இளைஞர்கள் இ. தி. மு. க. வில் நம்பிக்கை இல்லா தீர்மானம் ஒன்று கொண்டுவர காத்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதையும் பல கோஷ்டியினர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. எஸ். ஆனந்தன்,
காலி.

### ஆதி திராவிடர் தலைவர் மறைவுக்கு அனுதாபம்

திருநெல்வேலி மாவட்டம் ஆதிதிராவிடர் மகாஜன சங்கம் இலங்கை கிளையின் தலைவராக இருந்து கடந்த பல ஆண்டுகளாக இலங்கையிலும், இந்தியாவிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றங் கருதி இடைவிடாது பணிபுரிந்து வந்த பிரபல சமூக ஊழியரான திரு ஏ. பி. ஈனமுத்துவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக திருநெல்வேலி மாவட்டம் ஆதி திராவிடர் மகாஜன சங்கம்—இலங்கை கிளை, இராமநாதபுரம்மாவட்டம் தாழ்த்தப்பட்ட வகுப்பார் சம்மேளனம்—இலங்கை கிளை ஆகிய இரு ஸ்தாபனங்களின் ஆதரவில் கும்பெனித்தெரு பிரிட்ஜ் வீதியிலுள்ள "தொழிலாளர் கூடும்" மண்டபத்தில் சென்ற 1-9-57-ல் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு எஸ். ஆர். முத்தையா தலைமை வகித்தார்.

திரு. ஈனமுத்து தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு ஆற்றியுள்ள சேவைகளைப் பாராட்டி திருவாளர்கள் ஏ. எஸ். ஜான், ஏ. எம். துரைசாமி, மூ. வேலாயுதம் தெ. பொன்னுசாமி, சு. கா. சுந்தரராசன், கே. ஏ. சாமிநாதன், எஸ். எம். சாமிமுதலியோர் பேசினுர்கள்.

காலஞ்சென்ற திரு. ஈனமுத்துவின் பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்திற்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் துக்கத்தையும் தெரிவிப்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### என். எஸ். கே.

கலைவாணர் திரு என். எஸ் கிருஷ்ணன் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு செய்துள்ள பல உதவிகளை நன்றியறிதலோடு நினைவுகூறுவதாகவும் அன்னுரின் திடீர் மறைவுக்கு கூட்டம் தனது ஆழ்ந்த துயரத்தை தெரிவித்துக் கொள்கிறதென்றும் ஒரு தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

### இலங்கை மறுமலர்ச்சி மன்றம்

இலங்கை மறுமலர்ச்சி மன்ற நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் கடந்த 19-8-57ல் திரு பி. முத்துராமன் தலைமையில் கொள்ளுப்பிட்டி கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

திருவாளர்கள்சிவலிங்கம், ஏ. எம் பண்டா, ஏ. பாலசுந்தரம், எஸ். செல்லையா, ஏ. வி. தென்னரசு, எஸ். வேலு, கே பி தங்கவேல் ஆகியோர் பேசிய பின்னர் நடப்பு வருடத்திற்கு கீழ் கண்டவர்கள் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: கே. வெள்ளைச்சாமி, உபதலைவர்: கே. பி. வேலு, செயலாளர்: ஏ. வி. தென்னரசு, துணைச் செயலாளர்: கே. பி. தங்கவேல், பொருளாளர்: எஸ். வேலு, துணைப் பொருளாளர்: கே. பி. சாமிமுத்து.

மற்றும் ஒன்பது பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.


தமிழ்
பிரேஷ்ட பரீட்சை
கடந்த பரீட்சையின்
வினு விடைகள்:

| | |
|---|---|
| தமிழ் மொழி | ரூ. 3-00 |
| சைவ சமயம் | ரூ. 3-00 |
| ஆங்கிலம் | ரூ. 3-00 |
| எண் கணிதம் | ரூ. 3-00 |
| இலங்கை சரிதம் | ரூ. 3-00 |
| ஆங்கில கட்டுரை | ரூ. 3-00 |
| தமிழ்க் கட்டுரை | ரூ. 3-00 |

ஆங்கிலப் பரீட்சைக்கு வினு-விடைகள், குறிப்புகள் எல்லாப் பாடங்களிலும் கிடைக்கும்.

★ ஆங்கிலம்
★ ஹிந்தி

பேச, வாசிக்க, எழுத தபாலில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

சாந்தி கல்லூரி,
தபால் பெட்டி 1398,
கொழும்பு.

யப்பான் வைர, தங்க
நகை மாளிகை

உங்கள் நினைவில் இருக்கட்டும்.

உங்கள் நகைகளை வேண்டுவதற்கும் விற்பதற்கும் முன்னுல் யப்பான் நகை வியாபாரிகளை ஆலோசிக்கவும்.



64, கன்னுதிட்டி தெரு,
போன்: 518. யாழ்ப்பாணம்.
கிளை: 163, புதுச்செட்டித் தெரு, கொழும்பு.
போன்: 5489.

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

போன்:- 281. தந்தி:- "ஜுவல்லர்ஸ்"

உத்தரவாதம் பெற்ற வைரங்கள்!
அழகு மிக்க தங்க ஆபரணங்கள் !!
யாவற்றிற்கும் சிறந்த இடம்
யாழ்ப்பாணம்

தங்க மாளிகை

★ தோற்றத்திலே கவர்ச்சி!
★ உழைப்பிலே புகழ்ச்சி!!
★ தரத்திலே உயர்ச்சி!!!
பெற்று விளங்குபவை
எல். கே. எஸ். நகைகளே.
சிறந்த அழகுற்ற எல். கே. எஸ். நகைகளையே என்றென்றும் அணியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் திரைகளில்



## எதிர்பாருங்கள் !

எம். ஜி. ராமச்சந்திரன்,
ஈ. வி. சரோஜா,
சந்திரபாபு,
பி. எஸ். சரோஜா,
ராஜகுமாரி,
பாலையா, சகாதேவன்,
டி. ஆர். பாலசுப்பிரமணியம்

இன்னும் பலர் நடித்த

# "புதுமைப் பித்தன்"

தந்தையைக் காப்பாற்றும் தனயனின் வீர வரலாற்றைச் சித்தரிக்கும் சிறந்த ராஜ ராணிக் கதை.

**"சித்தப்பாவுக்கு மீசை போனால் அத்தையாவாளா?"**

**"கொடுத்த வாக்கை மீறுவதுதான் என் ஆட்சியில் நடக்கப் போகும் முக்கிய விஷயம்"**


இது போன்ற கருணாநிதியின் கருத்துள்ள வசனங்களைக் காது குளிரக் கேட்க 'புதுமைப் பித்தனுக்'காகக் காத்திருங்கள்.

கதை வசனம்:

## மு. கருணாநிதி.

டைரக்‌ஷன்:

## ராமண்ணா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1957 செப்டம்பர் மாதம் 8ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.